பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 25 திங்கட்கிழமை (07.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 133



# அமைச்சர் ஜெயராஜ் குண்டுவெடிப்பில் பலி!

## விளையாட்டு மைதானத்தில் நேற்றுக்காலை கோரம் மற்றும் பதினான்கு பேர் சாவு; நூறு பேர் படுகாயம்

கொழும்பு, ஏப்ரல் 07

**கம்பஹா மாவட்டம், வெலிவேரியாவில் நேற்றுக்காலை 7.40 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தாக்குதலில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரும், ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும், பெருந்தெருக்கள், வீதி அபிவிருத்தித் துறை அமைச்சரும், நாடாளுமன்றில் அரசுத் தரப்பின் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர் ணாண்டோபுள்ளே (வயது - 55) கொல்லப்பட்டார். அவருடன் சேர்ந்து இந்தக் கோரச் சம்ப வத்தில் பதினான்கு பேர் உயிரிழந்தனர்; நூறு பேர் வரை படுகாயமடைந்தனர்.**

இந்தக் குண்டு வெடிப்பில் இலங்கையின் தேசிய தடகள மெய்வன்மைப் பயிற்சியா ளர் லக்ஷ்மன் டி அல்விஸ், இலங்கையின் சார் பில் ஒலிம்பிக் போட்டிகளில் 16 ஆண்டு களுக்கு முன்னர் பங்குபற்றிய பிரபல மரதன் ஓட்ட வீரர் கருணாரத்ன ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

தமிழ் - சிங்களப் புதுவருடப் பிறப்பை ஒட்டி வெலிவேரியாவில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த மரதன் ஓட்டப் போட்டி ஒன்றை அங்குள்ள கந்தி மைதானத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தலைமை வகித்து தொடக்கிவைக்கவிருந்த சமயத் திலேயே இக்குண்டு வெடிப்பு இடம்பெற் றிருக்கின்றது.

மரதன் ஓடுவதற்குத் தயாராக ஆரம்பக் கோட்டில் தரித்து நின்ற மெய்வல்லுநர்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் இன்று அஞ்சலி

கொழும்பு, ஏப். 07

நேற்றைய குண்டுவெடிப்பில் கொல் லப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் 100 நாள்களில் எம்.பிக்கள் அறுவர் உயிரிழந்தனர்

கொழும்பு, ஏப். 07

புது வருடம் பிறந்து நூறு நாள்களுக்குள் ஆறாவது நாடாளுமன்ற உறுப்பினரை தற் போதைய நாடாளுமன்றம் இழந்திருக்கின்றது.

ஜனவரி முதலாம் திகதி மகேஸ்வரன் எம்.பி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து தமிழக மீனவர் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 07

கச்சதீவுக்கும் - நெடுந்தீவுக்கும் இடை யில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஐந்து தமி ழக மீனவர்கள் சனிக்கிழமையன்று கைது செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பகல் மேற்குறிப்பிட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே ஜனாதிபதியின் சட்டக்கல்லூரித் தோழர்

கொழும்பு, ஏப்ரல் 07

நேற்றைய குண்டுவெடிப்பில் பலியான அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவும் சட்டக்கல்லூரித் தோழ ரும் ஆவார்.

1953ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி பிறந்த ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தமது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு ஆவி

(12 ஆம் பக்கம் பார்க்க)


## பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் உறுதிப்பாடு மேலும் தீவிரமாகும்!

### படுகொலை குறித்து ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 07

வெலிவேரியாவில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கொலை செய்யப் பட்ட சம்பவத்தை விடுதலைப்புலிகளின் கோழைத்தனமான செயல் எனக் கண்டித் துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களைப் பொறுமை காக்கும்படி வேண்டு கோள் விடுத்துள்ளார். இப் படுகொலை பயங் கரவாதத்தைத் தோற்கடிக்கும் அரசினது

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஷெல்வீச்சுத் தாக்குதலுக்குள்ளாகி சேதமான மடுமாதா தேவாலயத்தை மேலே உள்ள படத்திலும் தேவன்பிட்டி ஆலயத்தில் தற்போது வைக்கப்பட்டிருக்கும் மடுமாதா சொருபத்தை கீழே உள்ள படத்திலும் காணலாம்.



குண்டுவெடிப்பில் கொலையுண்டவர்களின் சடலங்களின் எச்சங்கள் குவியலாக காணப்படுகின்றன.

## மடு தேவாலயப் பகுதியில் போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் அங்கிருந்து அகல வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 07

மடுப்பகுதியின் புனிதத்தை மதிக்கும் வகையில் போரில் ஈடுபட்டுள்ள இருதரப் பினரும் அந்தப் பிரதேசத்தை விட்டு அகல வேண்டும்.

இவ்வாறு யாழ். ஆயர் மற்றும் குருமுதல் வர் சார்பில் மன்னார் ஆயருக்கு எழுதப் பட்ட கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக குருமுதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் ஒப்பமிட்டு மன்னார் ஆயருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மடுப்பகுதியில் நடந்துவரும் போர் அன[illegible] தங்கள் குறித்தும் சரித்திரத்தில் முதல்தட[illegible]

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்




அமரர் த.பஞ்சலிங்கத்தின் பூதவுடல் யாழ். கல்வி வலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதை முதலாவது படத்தில் காணலாம். இறுதி ஊர்வலத்தில் மாணவிகள் பாண்ட் வாத்தியம் இசைத்துச் செல்வதையும், மாணவர்கள் மலர்வளையங்களை எடுத்துச் செல்வதையும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பதாகை முன்னால் எடுத்துச்செல்வதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்

# கலங்கிய கண்களுடன் பஞ்சலிங்கத்தை வழியனுப்பி வைத்தது திரளாக வந்த குடாநாட்டின் கல்விச் சமூகம்

யாழ்ப்பாணம்,ஏப் 8

ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி பின்னர் யாழ். கல்வி வல யத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமை செய்தவரும் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைப் பொதுச் செயளாளராக நீண்ட காலமாக கடமையாற்றி வந்தவருமான தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ் கல்வி வலயத்தில் உருக்கமான முறையில் நடந்தேறியது.

குடாநாட்டு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏனைய சகோதர சங்கத்தினர், குடாநாட்டின் வலயங்களை சேர்ந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்ககழகத்தை சார்ந்தவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் என யாழ்.கல்வி சமூகம் இறுதிப் பிரியாவிடை அஞ்சலி நிகழ்வில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டது.

அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகள், அஞ்சலி உரையைத் தொடர்ந்து ஊர்வலமாக அமரரின் பூதவுடல் யாழ்.கல்விப் பணி மனைக்கு எடுத்து வரப்பட்டது. அமரரின் இல்லத்தில் பிரமுகர்கள், நிறுவனங்களின் அதிகாரிகள் உட்பட பெரும் எண்ணிக்கை யானோர் மலர் அஞ்சலி செலுத்தியதோடு அஞ்சலி உரைகளும் நிகழ்த்தினர்.

செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய பவனியுடன் ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட பூதவுடலையாழ் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், மற்றும் அதிகாரிகள் காலை 11.15 மணியளவில் யாழ் வலயத்தில் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

விசேடமாக அமைக்கப்பட்டதும், வாழை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது மான மேடையில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பித்தன. தேவாரம், திருவாசகபாராணத்தை தொடர்ந்து மலர் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பிரமுகர்கள் மாலைசாத்தி அஞ்சலிசெலுத்தினர்.

இறுதி நிகழ்வாக யாழ்.வலய நிர்வாக உத்தியோகத்தர் இ.நாகராசா தலைமையில் அஞ்சலி உரைகள் ஆரம்பித்து நடந்தன.

ஒரு தொழிற் சங்கவாதியாகவும் அதே நேரத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளரா கவும் வித்தியாசமான-முரண்பாடுகளை உடைய இரு வேறுபட்ட பணிகளை ஒரே நேரத்தில் முரண்பாடுகள் இல்லாத முறை யில் இணக்கமாகவும் சிறப்பாகவும் முன் னெடுத்து கடமையாற்றிய பன்முகத்தன்மை வாய்ந்த ஆளுமை பல்வேறு பட்ட கோணங்களில் நின்று நினைவு கூரப் பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டமை வித்தியாச மாகவும் இருந்தது.

முன்னாள் யாழ்.. வலயப்பணிப்பாளரும் வடகிழக்கு மாகாண முன்னாள் பணிப்பாளருமான செல்வி. பெரியதம்பி, மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், யாழ்.வலயப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம், தீவக வலயப்பதில் பணிப்பாளர் ஆர்.இராதாகிருஸ்ணன் வடமராட்சிப் பணிப்பாளர் வி.ரி .செல்வராசா, பேராசிரியர் அ.சண்முகதாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான அருணகிரிராஜா, இராசலிங்கம், வி.குணசேகரம், யுனிசெவ் பிரதிநிதி உமாதேவி, விளையாட்டு உதவிக் கல்விப் பணிப்பாளரும் தமிழர் ஆசிரிய சங்க பிரதி நிதியுமான எஸ்.குமாரசுவாமி உட்படப் பலரும் அஞ்சலி உரை நிகழ் வில் கலந்து கொண்டனர்.

பி.ப 12.30 மணியளவில் கல் விச் சமூகத்தினரின் கலங்கிய விழிகளுடன் மயானம் நோக்கிய இறுதிப்பயணம் ஆரம்பித்தது(அ-302)

## தென்மராட்சிப் பதிவாளர் அலுவலகத்தில் தினமும் 60 விண்ணப்பங்கள் ஒப்படைப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலக பதிவாளர் அலுவலகத்தில் நாளாந்தம் 60 இற்கும் மேற்பட்ட பதிவுப் பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கிடைப்பதாக தென்மராட்சி பிரதேசசெயலக மாவட்டப் பதிவாளர் திருமதி.அன்ரனிஷ்ஷா மரியதேவி தெரிவித்தார்.

கிடைக்கும் விண்ணப்பங்களில் பொது மக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அவசரமாக தேவைப்படுவோருக்கு மக்களின் நலனைக்கருத்தில்கொண்டு தேவைப்படும் உறுதிப்படுத்திய பத்திரங்கள் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.பொதுமக்கள் பிறப்புஇறப்பு, திருமணப் பதிவுகளை உரிய வேளைகளில் பதிவு செய்து வருகிறார்கள்.

எனினும் இறப்புப் பதிவுகளில் வயோதிபர்களின் பதிவுகளை உரிய வேளைகளில் பதிவு செய்ய முன்வருவதில்லை. ஆனால் இவர்கள் உரிய தேவைகள் ஏற்பட்டால் நேடியாக வருகிறார்கள். இந்நிலை மாற்றப்படவேண்டும்.(203-131)


துரித தபால்கள் பொதிகள் சேவை

மலரும் புத்தாண்டை முன்னிட்டு
மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு 10% - 20%
வரையான பொதிகளுக்கு விசேட விலைக் கழிவு

FedEx Express

லண்டனுக்கு அனுப்பப்படும்
5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த
கட்டணத்தில் விசேட சலுகை
1-Kg-900/=

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

[ உங்களுக்காக விடுமுறை நாட்களிலும்!]

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

எனது மாணவியும் காரை மண்ணின் புகழ்பூத்த ஆங்கில ஆசிரியர்களான திரு.க.ந.விஜயரத்தினம், திருமதி சிவயோகம் விஜயரத்தினம் ஆகியோரின் மகளும் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில இலக்கியத்துறை விரிவுரையாளருமாகிய கலாநிதி

திருமதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம்



அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில்ஆங்கில இலக்கியத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றமையை இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேன் மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்று ஆங்கிலப் பேராசிரியராக வர எல்லாம்வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை ப்பிராத்திக்கின்றோம்.

திருமதி.த.நாகரத்தினம்
ஓய்வுபெற்ற அதிபர்
மாப்பாணவூரி, காரைநகர்.


## சாவகச்சேரிப் பிரதேசத்தில் புத்தகதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.7

உலக புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேசசபையின் பொது நூலகங்களில் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கச்சாய், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய நூலகங்களிலே இச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பிரதேச சபைச் செயலாளர் வி.சிவராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கச்சாய் பொது நூலகத்தால் நூல்கள்சேகரித்தல், நூலகக் கண்காட்சி என்பனவும் 14ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை வரணி பொது நூல கத்தால் வாசகர் வட்ட உறுப்பினர்கள்மூலம் நூல்கள் சேகரிப்பு மற்றும் இலக்கியக் கருத்தரங்கு ஆகியனவும் நடத் தப்படவுள் ளன.

சரசாலை பொது நூலகத்தில் 20ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதிவரை நூல் சேகரிப்பும் 23 ஆம் திகதிகண்காட்சி மற்றும் இலக்கியக் கருத்தரங்கு என்பனவும் நடத்தப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### ஞானப்பிரகாசம் சவிரிமுத்து



காலஞ்சென்ற திரு.திருமதி.ஞானப்பிரகாசம் தம்பதியினரின் புதல்வனும், புனித அந்தோனியார் பதியைச் சேர்ந்தவரும்/குழந்தை யேசு செபக்கூடத்தை வாழ்விடமாகவும் கொண்டவருமாகிய ஞா.சவிரிமுத்து நேற்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் திருமதி ச.பிலோமினா அவர்களின் கணவரும், ஞா.மனுவேற்பிள்ளை, ஞா.யோசேப் (கனடா), காலஞ்சென்ற பி.மேரிதிரேசா, காலஞ்சென்ற லூர்த்தம்மா, ஞா.அந்தோனிப்பிள்ளை (திருகோணமலை), ஞா.மிக் கேற்பிள்ளை (சுவிஸ்), கி.மேரிறெஜினா (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், ச.மனோ (நோர்வே), ச.பீற்றர், திருமதி அ.தயா (ஜேர்மனி), திருமதி யோ.இதயா (நோர்வே), திருமதி.க. விஜிதா (நோர்வே), காலஞ்சென்ற ச.பெனிற்றர் ஆகியோரின் தந் தையும், திருமதி இ.மேரிதிரேசா (நோர்வே), திருமதி.றொ. ஜெயந்தி, யோ.குலம் (ஜேர்மனி), தி.ஆ.யோகன் (நோர்வே), கஜேந்திரன் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், குலவின்சன், கோமஸ்(நோர்வே),பிறைசன், லிவின்சன், நிக்சன், அலனா, கென்சன், ஜென்சன் (ஜேர்மனி), றொக்சன்,ஜெப்ரி(நோர்வே),றிச்சாட், றியாணா,கெபின்(நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்விற்காக அன்னாரின் பூதவுடல் இன்று (07.04.2008) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நல்லடக்கத்திற்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குழந்தை யேசு ஜெபக்கூடம்,
மூன்றாம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
ச.றொபேட் அன்ரன்
(மகன் - பீற்றர்)

(72894)

### அப்பாத்துரை சிவதாசன்

[முன்னாள் கிராம அலுவலர், J/130 சுதுமலை தெற்கு]



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமான அப்பாத்துரை சிவதாசன் நேற்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை-நல்லம்மா தம்பதியினரின்அன்பு மகனும், காலஞ்சென்ற சந்திரம்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், றஜிந்தா (கனடா), லிவிந்தா (லண்டன்), சர்மிலா, பிரதீப் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், சண்முகநாதன் மற்றும் பரமேஸ்வரி, இரத்தினபூபதி ஆகியோரின் சகோதரனும், கிருபா, வாசுதேவன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் துக்க நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடிலேன்,சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
சகோதரி,
சிவகுமார் (மருமகன்)

(A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் என்றும் இன்றும் பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் அம்மன்

ஈழவள நாட்டில் உள்ள வரலாற்றுப் பிரசித்தியும் சிறப்பும் பெற்ற ஆலயங்களுள் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை ஆலயமும் ஒன்று.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சிப் பெரு நிலப்பரப்பில் இந்த ஆலயம் மிக அழகுற அமைந்துள்ளது. சாவகச்சேரி - புத்தூர் வீதியில் மட்டுவில் வடக்குப் பகுதியில் வயல் சார்ந்த பகுதியில் மருத மரங்களும் புளியமரங்களும் ஓங்கி வளர்ந்த இடத்தில் இந்த புண்ணிய தலம் அமைந்துள்ளது.

அம்பாளின் ஆலயம் மிகப் பழமையானது. அதற்குச் சான்றாக ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்புறமாக உள்ள (அதாவது அம்பாளின் தூபியின் கீழ் உள்ள) சுவரில் பொழிந்த கற்களின் மீது பித்தளைத் தகட்டில் 1750 ஆண்டு காலப்பகுதி எனப் பொறிக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. இது ஆலய வரலாற்றுக் காலத்தை வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

ஆலயச் சூழல் இயற்கையுடன் ஒன்றித்து அழகு நிறைந்த பொலிவான இடமாகும். ஓங்கிவளர்ந்த தென்னைகள், அதனை மருவியபடி பனைமரங்கள் அருகே குளிர் தரும் பச்சைப் பசேலென்ற வளர்ந்த மரங்கள் அசைந்து ஆலயத்திற்கு பெருமெரு கூட்டுகின்றன.

### புனித தீர்த்தக்கேணி

ஆலயத்தின் தெற்குப் பகுதியில் 100 அடிக்கு மேல் நீள அகலம் கொண்ட புனிதமான புண்ணிய தீர்த்தக் கேணி அமைந்துள்ளது. கேணியில் நிறைந்துள்ள புனித தீர்த்தம், சலசலத்தவாறு தளம்பிய நிலையில் தூய்மையாக அடியவர்களின் பிணி தீர்க்கும்அருமருந்தாக உள்ளது.

ஆலயத்தின் வரலாறு தனிச்சிறப்புக் கொண்டது. அம்பாளின் அற்புதங்கள் எண்ணிலடங்காதன. இதனால் ஆலயத்தில் திங்கள், புதன், வெள்ளிகளில் மற்றும் விசேட தினங்களில் ஆலயச் சூழலில் கூடும் அடியார்கள் எண்ணிக்கை மிகப்பெரிது. அம்பாளின் அருளாட்சி, அற்புதங்கள் உட்பட தன்னை நாடி வரும் நல்லடியார்களுக்கு நற்பேறு வழங்கி நல்வாழ்வளிக்கும் தாய்த் தெய்வம் எங்கள் அம்பாள்.

பங்குனி மாதம் என்றதும் மட்டுவில் பகுதி முழுவதுமே புனித பிரதேசமாக மாற ஆரம்பித்துவிடும். மட்டுவில் ஒரு விஸ்தீரணமான பகுதியாகும். ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பெரிய பகுதி. இந்தப் பகுதி மக்கள் புனிதத் தன்மையைப் பேண ஆரம்பித்து விடுவார்கள். மாமிசம் சாப்பிடுபவர்கள் கூட தாவர உணவினை உண்ண ஆரம்பித்து விடுவார்கள். மதுபானம் பாவிப்பவர்கள் மது அருந்துவதை நிறுத்திவிடுவார்கள். வீதிகள் புற்கள் செதுக்கப்பட்டு வீட்டு முற்றம் போல அழுகுபடுத்தி விடுவார்கள். அதேபோல ஆலயத்தில் இளைஞர்கள், யுவதிகள், பெண்கள், ஆண்கள், வயோதிபர்கள் என ஒன்றுகூடி ஆலய வளாகத்தை துப்புரவு செய்வதுடன் ஆலயத்தைச் சூழவுள்ள காணிகளில் வளர்ந்த பற்றைகளை வெட்டி துப்புரவு செய்யும் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவார்கள்.

## மருதவளச் சூழலில் மட்டுவில் பொங்கல் தனிச்சிறப்பும் திவ்வியமும் நிறைந்தது

### ஆலயச் சூழலில் தண்ணீர்ப் பந்தல்

ஆலய உற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் அமைக்கப்படும் தண்ணீர்ப்பந்தல்கள், வீதிகளில் ஒழுங்கைகளில் ஆங்காங்கே பங்குனி வெய்யிலினால் உண்டாகும் கடும் தாகத்தைத் தணிக்க அமைக்கப்படும் தண்ணீர்ப்பந்தல்கள் ஏராளம். இதனை நேர்த்திக்கடனாக செய்யும் பக்தர்களே அனேகர் எனலாம். ஆலயம் செல்லும் பக்தர்களும் ஆலயத்தால் திரும்பி வீடு திரும்பும் பக்தர்களும் தாகத்தைத் தீர்க்கும் தாக சாந்தி நிலையங்களாக அமைவது மிகச் சிறப்பாகும்.

### பிரசித்தி வாய்ந்த பொங்கல் நிகழ்வு

பங்குனித் திங்கள் என்றால் புனிதப் பொங்கல் உற்சவம் என்று கருதலாம். இதனால் ஆலயச் சூழல் ஆயிரமாயிரம் பக்தர்கள், தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் தளமாக மாறிவிடும். அம்மன் சந்நிதி பொங்கலினால் ஆலயச் சூழலில் உண்டாகும் புகையும் கற்பூர தீபங்களால் ஏற்படும் புகையும் வானைத் தொடுமளவிற்கு உயர்ந்து செல்லும் காட்சியும் விசேடமானதாகும். ஆலயச் சூழல் மழை முகில் போல புகை எங்கும் வியாபித்து காணப்படுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆலயத்தில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் அடியார்கள் பொங்கல் பானையிலே ஆலயத் தீர்த்தக் கேணியில் இருந்து நீரை எடுத்து பொங்கல் அரிசியை பானையிலிட்டு பசுப்பால் அல்லது தேங்காய்ப்பால் மற்றும் சர்க்கரை இட்டு பொங்கல் படைப்பர். பொங்கலுடன் மட்டுவில் அம்மன் கோயில் வயல்வெளியில் காய்த்துக் குலுங்கும் கத்தரிக்காயை வாங்கி சேர்த்துப் பொங்குவது சிறப்பான சுவையான பொங்கலாகிவிடும்.

அரிசி அவித்து காய்கறிகள் சமைத்து தயிர், ஊறுகாய் என்பவற்றுடன் நிவேதிக்கும் நீர்ச்சோறு ஒரு வகை. மருதவளச் சூழலில் வருடாந்தப் பங்குனி மாதத்தில் நடைபெறும் மட்டுவில் அம்மன் பொங்கல் தனிச்சிறப்பும் திவ்வியமும் நிறைந்தது.

அதிகாலை முதல் பிற்பகல் வரை கத்தரிக்காய் சேர்த்த பொங்கல் [illegible] மோதகம், வடை என்பன அவித்து [illegible] தித்தல் அவற்றை ஆலய முகப்பில் [illegible] ளுக்கு நிவேதித்து ஆலய சூழலில் உள்ள அடியார்களுக்கு வழங்கி அம்பாளின் இஷ்ட சித்திகளை பெறுவதற்குக் கூடும் பக்தர்கள் வெள்ளம் போல் திரள்வர்.



பன்றித் தலைச்சி அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்

இவ்வாறு பங்குனித் திங்கள் நாள்களில் பொங்கல் நேர்த்திகளை அதிகாலை முதல் பிற்பகல் வரை நிறைவு செய்யும் அருட்பிரவாகம் அங்கு உண்டு.

### ஆலயத்தில் காவடி

பங்குனி உற்சவத்தில் காவடி எடுக்கும் பக்தர்கள் தமது குறைகளை அம்பாளிடம் ஒப்படைத்து அனுக்கிரகம் பெறுவார்கள். பாற்காவடி, தூக்குக்காவடி, பறவைக்காவடி, பூக்காவடி என பலவகைக் காவடிகளை எடுத்து நிறைவு செய்வர். தூர இடங்களில் இருந்தும் காவடிகளை எடுத்து நேர்த்திக் கடன் செய்யும் அடியார் கூட்டம் அதிகமானது

ஆலயத்தில் பங்குனி உற்சவத்தில் சிறப்பான பூசைவழிபாடுகள் நேரம் தவறாது அபிசேக ஆராதனைகளுடன் நடைபெறுகின்றன. "காலைப் பூசை வழிபாட்டைத் தொடர்ந்துவிசேட அபிசேகம் நடைபெற்று காலை10 மணியளவில் காலைத் திருவிழாவும் பிற்பகல் 4 மணிக்கு மாலைத் திருவிழாவும் நடைபெறுகிறது. இந்த ஆயலத்தில் மூன்று சுற்றுப் புற வீதிகள் காணப்படுகின்றன. காலைத் திருவிழா உள்பக்கமாகவும் இரண்டாம் வீதியிலும் மாலைத்திருவிழா உள்வீதியிலும் மூன்றாம் வீதியிலும் நடைபெறும். மாலைத்த திருவிழா அழகிய மலர் மஞ்சத்தில் அம்பாள் வீதியுலா கண்கொள்ளாக் காட்சி.

### ஆலயத் தோற்றம்

ஆலயத்தில் முன்புறம் பழமையான தூண்களைக் கொண்டதாகவே காணப்படுகிறது. உள்மண்டபத்தைப் புதிதாக அமைக்க ஏதுவாக தூண்கள் நாட்டப்பட்டு துரித பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது [illegible] அம்பாள் ஆலயத்திற்கு அழகிய கோபுரம் அமைக்கவும் ஆலய முகாமையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அதற்கான திருப்பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### ஆலய ஒழுங்குவிதிகள்

ஆலய உற்சவ காலத்தில் ஆலய ஒழுங்குவிதிகள் தொடர்பாக ஆலய முகாமையாளரும், தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் என்பன இணைந்து தீர்மானங்களை மேற் கொண்டு காலம் காலமாக கடைப்பிடித்து வரப்படுகின்றன. சுகாதாரம், போக்குவரத்து ஒழுங்கு பேணுதல், ஆலயச் சுற்றாடலை பாதுகாத்தல் என்பவற்றை நிர்வகித்து ஒழுங்கைப் பேணி வருகின்றனர்.

த.அருணன்

எனவே ஆலயத்தில் கூடும் பக்தர்களும் ஒழுங்கு விதிகளை பேணுவது மிகவும் அவசியமாகிறது.

இன்று இவ்வருடத்துக்கான கடைசிப் பங்குனித் திங்களாகும் எல்லோரும் அம்பாளின் திருவடிகளை வணங்கி அவரின் அருட்கடாச்சத்தை பெறுவோமா

எல்லையற்ற துன்பங்களுடன் தன்னை நாடி வருபவர்களுக்கு அன்றும், இன்றும், என்றும் அருளை வாரி வழங்கும் தாய்த் தெய்வமாக பன்றித் தலைச்சி அம்பாள் விளங்குகின்றாள். அவள் அடி சரண்புகுவோம்.

---

# மடுமாதா சொரூபத்தை பத்திரமாகப் பாதுகாப்பதே முக்கிய நோக்கம்



இக்பால் அத்தாஸின் கள நிலை ஆய்விலிருந்து

கிறிஸ்தவர்களின் மிக முக்கிய புனித ஸ்தலமான மடு மாதா கோயிலும் அதன் சுற்றுப் புறங்களும் படைகள் வசமாகும் நிலை ஏற்பட்டுவிட்டதாகக் கருதப்படும் அதே வேளை அது நனவாவதற்கு இன்னும் காலம் பிடிக்கலாம் என்றும் தோன்றுகின்றது.

இந்த வாரம் பூதராயன் குளத்துக்கு கிழக்குப் பகுதியில் முன்னேறிக் கொண்டிருக்கும் படையினர் மாதா கோயிலுக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு வந்துவிட்டன. என்று தெரிகின்றது. இதற்கு முன்னதாக வெளியிடப்படாத ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுள்ள ஒரு படையணியானது அதன் குறிக்கோளை எட்டியதும் அப்பகுதியே சீல் வைத்து மூடியது போல் ஆகிவிடும். இது வெற்றியளிக்குமானால் மன்னார் களமுனையில் மேற் கொள்ளப்பட்ட பிரதான இராணுவ நடவடிக்கை முற்றுப் பெற்றுவிட்டதாகக் கருதப்படும்.



மடுமாதா கோயிலையும் அதன் சுற்றாடலையும் கைப்பற்றும் முயற்சி 9 மாதங்களுக்கு முன்னர் கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கு மாகாணம் முற்றுமுழுதாகக் கைப்பற்றப்பட்டு விட்டதாக அரசு அறிவித்த கையோடு இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

### விடத்தல்தீவைக் கைப்பற்றுவதற்கு ஒரு படையணி

இந்த நடவடிக்கையின் இன்னொரு நோக்கம் என்னவென்றால் பூதராயன் குளத்துக்கு மேற்குப் பக்கமாக நகர்ந்து செல்லும் படையணிகள் விடத்தல் தீவு பகுதியைக் கைப்பற்ற வேண்டும் என்பதாம். இப்பகுதியிலேயே கடற் புலிகளின் பிரதான தளம் அமைந்திருப் பதாகக் கருதப்படுகின்றது. மடு பிரதேசத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையானது பல காரணங்களை உள்ளடக்கியதாய் உள்ளது. இந்த வெற்றியை அடைந்தே ஆக வேண்டும் என்பதுடன் அதனை நிறைவேற்றுவதிலும் அரசுத் தலைவர்கள் மிகுந்த ஆவலுடையவர்களாய் இருக்கின்றனர். இதனை அதிக காலதாமதமின்றியே நிறைவேற்ற வேண்டும் என்பது இராணுவ அதிகாரிகளின் எண்ணம்.

போர் நிறுத்த உடன்படிக்கை நிராகரிக்கப்படுவதற்கு அமைச்சரவை முடிவெடுக்க முன்பே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலைமையில் தான் 2008 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னரே புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள் என்று அரச மற்றும் ராணுவத் தலைவர்கள் வெளிப்படையாக அறிவித்தல்களை வெளியிட்டிருக்கின்றார்கள்.

## தேவாலய பகுதிக்கு ஒரு கி.மீ. தூரத்தில் அரச படைகள்

டிசெம்பர் 31 ஆம் திகதியின் போது கெரில்லாக்கள் அழிக்கப்பட்ட நிலையில் இருப்பார்கள் என்று ராணுவத் தலைவர்கள் கூறியிருந்தார்கள். பின்னர் இந்தக் காலக் கெடுவை அடுத்த வருடத்துக்கு ஏன் இன்னும் தூர காலத்துக்கு ஒத்திவைத்து பேசினார்கள். இன்னும் சிலர் காலக் கெடு விதிப்பது சாத்தியமில்லையென்றும் சொன்னார்கள்.

இரண்டு சகாப்த பிரிவினைவாதப் போரில் இவ்வாறு மதிப்பீடுகளை மாற்றி மாற்றி கூறுவது ஒரு கலாசாரமாகவே இருந்து வந்துள்ளது. இது இலங்கை விவகாரம் பற்றிய ஆய்வாளர்களுக்கு ஆச்சரியமான விடயமாகவிருக்காது. இந்த வெற்றி எதிர்பார்ப்புக்கள் அவைகள் கட்டியெழுப்பப்படும் அத்திபாரத்தைப்போலவே அமைந்து விடுகின்றன. களத்தில் ஏற்படும் சாவுகளின் எண்ணிக்கையானது தோட்டா முனைகளின் வேகத்தை விட வேகமாக அதிகரிப்பதுண்டு. கெரில்லாக்கள் வசமுள்ள இடங்களைக் கைப்பற்றுவது போன்ற கள நிலைகள் மற்றும் விடயங்களை சீருடை ஊடகவியலாளர்களைப் போன்று வெளியிலுள்ளவர்களால் வெளிப்படுத்த முடியாது.

### பாரிய போருக்கு புலிகளும் ஆயத்தம்

மடுப் பகுதியின் போர் நிலைவரம் வரும் வாரங்களில் எப்படி இருக்கும் என்பது இரகசியம் அல்ல. கடந்த 9 மாதங்களாக ராணுவத்தின் முன்னேற்றத்தை தடுத்து வந்துள்ள போராளிகள் பாரிய யுத்தத்திற்குத் தயாராகி வருகிறார்கள்.

## உக்கிர மோதலுக்கு ஆயத்தமாகின்றனர்

"மன்னாரை இராணுவம் இன்று [illegible] பற்றி விடலாம் ஆனால் நாளைய தினம் நாங்கள் மதவாச்சியில் இருப்போம்" என்று

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007 - ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்தில் வெளியாகின.

குடாநாட்டின் பாடசாலைகளின் அதிபர்களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:-

**ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்**

பா.அங்குசன் -10ஏ, மா.ரேகாதீபன் -9ஏசி, செ.அயனன் - 6ஏ2பிசிஎஸ், ஜெ.சிந்துஜா- 6ஏ4சி, செ.தீவிகா-5ஏ5பி, ரா.சௌமியா-5ஏ2பி3சி, க.எழில்வதனி - 5ஏ2பிசி2எஸ், த.அஜந்தினா-5ஏ2பி2சி.

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

சுமதினி துரைராஜா-9ஏபி,விந்தியா சிவயோகபதி -7ஏ3பி,

**கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்**

றஜிதா ஜெயக்குமார் 2ஏபி3சி3எஸ், கஜேந்தினி மகாலிங்கம் -ஏ2பி2சி5எஸ், தக்ஷாயினி திருநாவுக்கரசு- ஏபி3சி4எஸ், குழந்தைவேலு கஜலக்ஷன்-ஏபி2சி4எஸ், தளையசிங்கம் கஜலகஷன் - ஏபி2சி4 எஸ், சிவபாலன் சிந்துஜன்-ஏபி2சி4எஸ், பாஸ்கரலிங்கம் செந்தூரன்-2பிசி5எஸ்

**பெரியபுலம் மகாவித்தியாலயம்**

இராசானந்தம் நிறோஜ்-5ஏ4பிசி, பத்மபிரியா பாலகணேசமூர்த்தி-5ஏ2பி3சி, றெபேக்கா யோகானந்தம்-4ஏபி5சி, அனோஜா மகேஸ்வரன்- 4ஏ3பி2சிஎஸ், வைதேகி பாபு-3ஏ4பி3சி, கணேஸ்வரன் கிரிசாந் - 3ஏ4பி2சி, பாலசிங்கம் ராகுலன்-3ஏ2பி5சி, கலையமுதா கந்தசாமி -2ஏ5பி3சி, பொன்னம்பலம் ரவிசாந்-3ஏ3பி3சிஎஸ், கஜிதா நந்தகுலசிங்கம்-2ஏ2பி3சி2எஸ்,

புவனேஸ்வரன் கஜிந்தன் 2ஏ2பி3சி2எஸ், சற்குணசிறிமிளேன்ராஜ்-2ஏ3பி3சி2எஸ், விஜயரத்தினம் சிந்துஜன்-ஏ3பி5சிஎஸ், பொபி மிதுலன்-ஏபி6சிஎஸ், கார்த்திகா நாகேந்திரராசா- ஏபி5சி2எஸ், நிறோஜா கனகரத்தினம் - 2ஏ4சி3எஸ், சஞ்சிகா மகேந்திரம் -2ஏபி4பிஎஸ், தர்சினி சந்திரகுமார்-2ஏபி3சி3எஸ், பவித்திரா சிவசுப்பிரமணியம்-2ஏ4சிஎஸ்,

**பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

சுகன்யா உதயகுமாரன்-9ஏபி, ரதி பரமலிங்கம் - 8ஏ2பி, கோபிகா பாஸ்கரமூர்த்தி- 5ஏ3பிசிஎஸ், கல்பனா கிருஷ்ணமூர்த் தி-5ஏ4பிசி, யசோதா நடராஜா-5ஏ3பி2சி, சங்கீதா முத்துலிங்கம் - 4ஏ2பி3சிஎஸ், நிஷா நாகேந்திரன் -3ஏபி4சி2எஸ், பிரேமினா மகேந்திரன் - 3ஏ2பி2சி2எஸ், கிருஷ்ணாநிதி புவனேஸ்வரன்-2ஏ2பி4சி2எஸ், வினோதினி கிருஷ்ணநந்தன்-ஏ3சி3எஸ்,

பவிதா பாலகிருஷ்ணன் - ஏ4சி3எஸ், சோபிதா சிவநேசன் - ஏபி4சி2எஸ், கோசிகா தவஞானராஜா-ஏ2சி3எஸ், கிருத்திகா ஞானப்பிரகாசம்-ஏ2பி2சி3எஸ், ஜீவிதா விஜயசேகரன்-2பி2சி4எஸ், கஸ்தூரி சோதிநாதன் - பி3சி2எஸ், செல்வராஜாவிஜயதாசன் - ஏபி2சி2எஸ், நந்தினி விக்னேஸ்வரன்- பி5சி3எஸ், லஜிதா கிருஷ்ணபவன் - 3பி3சிஎஸ், பரிமளா கிருஷ்ணமூர்த்தி -பி2சி 4எஸ்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

ஆர்.கௌசிகன் -10ஏ, ரி.லவீந்திரன்-10ஏ, எல்.சிறிநிகேதன்-10ஏ, ரி.தர்சன்-10ஏ, ரி.விதுர்சன் - 10ஏ, எஸ்.தனுஜா-10ஏ, கே.அருள்நந்தி-9ஏஎஸ், எஸ்.கஜனன்-9ஏசி, எஸ்.அஜந்தினி-9ஏசி, எ.கௌரிகா-9ஏசி

ஏ.இந்துஜா-9ஏசி, ஜே.துஷ்யந்தி-9ஏபி, கே.பிந்துஜா-9ஏபி, இ.ரிஷானா-9ஏபி, கே.ஜங்கரன்-8ஏசி, வி.சுவேந்திரமுதலி-8ஏசி, சி.கோபிகன்-8ஏபி, ரி.உதயபவன்-8ஏபி, பி.கஜனன்-8ஏபிஎஸ், வி.கோகலன் -8ஏபிசி.

ஜி.நிவேதிகா-8ஏபிசி, ரி.பதுமதி-8ஏபிசி, என்.டிலக்சி-8ஏபிசி, எஸ்.வசந்த்-8ஏ2சி, எஸ்.ராகுல் -8ஏ2பி, பி.அபர்ணா-8ஏ2பி, ரி.கேஜிகா-8ஏ2பி, எஸ்.கிரிதரன் -7ஏபிசிஎஸ், கே.வர்ஜிகா-7ஏபிசிஎஸ், ஆர்.திவியா-7 ஏபி2சி-

எம்.டினேஸ்-7ஏ3பி, எஸ்.கோபாலகிருஷ்ணன்-7ஏ3பி, கே.அஜந்தினி-7ஏ3பி, சி.ராஜதகிரீசன்-7ஏ2சிஎஸ், ரி.கிரிகரன்-7 ஏ2பி, கே.செல்வ தாஸ்- 7ஏ2பிசி, சி.வனுஜா- 7ஏ2பிசி, ரி.சுகிந்தன்-6ஏபி3சி, எஸ்.திகர்சன்- 6ஏ2பி2எஸ் ஜே.ஜனனி-6ஏபி2சி,

கே.துளிசிகரன்-6ஏ2பிசிஎஸ், சி.ஜந்துஜன்-6ஏ4பி, எஸ்.சகானா-6ஏ4பி, பி.குருபரன்-6ஏ2பிசி, வி.வேசிகா-6ஏ2பி2சி, ஜி.ஜிந்துசா-6ஏ2பி2சி, ரி.சுகந்தனா-6ஏ2பி2சி, ரி.பிரிந்தாபன்-5ஏபி4சி, பி.அபிராமி-5ஏபி4சி,எஸ்.பிரியந்தினி-5ஏபி4சி, ரி.சசிரூபன்-5ஏபி3சி, கே.பிரதீப்- 5ஏபி3சிஎஸ்,ரி.உமாகரன்-5ஏ4பிஎஸ், எம்.நிக்சலா-5ஏ4பிசி, கே.சுயாதா-5ஏ3பி2சி, எஸ்.கிரிவர்த்தினி-5ஏ2பி3சி, எஸ்.விபீசாந்-5ஏ2பி2சி.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஏசியன் அக்கடமியில்**

*(கேணியடிச் சந்தி, கொக்குவில் மேற்கு)*

அதிதிறமைச் சித்திகளும் திறமைச் சித்திகளும் பெற்ற அனைத்து மாணவர்களையும் (100%) சித்தியடையச் செய்த ஆசிரியர்களையும் நிர்வாகத்தையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேன்மேலும் கல்விச் சேவை வளர்ச்சி அடைய எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**2007 O/L மாணவர்களின் பெற்றோர்.** (72887)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி கோபிகா கந்தசாமிக்குருக்கள்**

(பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)



*ஜி.சீ.ஈ. சாதாரண தரம் 2007 பரீட்சையில் 10 பாடங்களிலும் "ஏ" (அதிவிசேட சித்தி) பெற்றிருக்கும் எங்கள் அன்பு மகளின் உயர் தரப் பெறுபேற்றுக்கு உறுதுணையாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் வழங்கி கல்வி புகட்டிய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் பணி மேலும் சிறக்க இறையருள் வேண்டுகிறோம்.*

*எங்கள் செல்வி கல்வி கேள்விகளில் சிறந்து உயர் பட்டங்கள் பல பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ வதிரி உல்லிய நெல்லை அம்பாள் இன்புருட்டி பிள்ளையார் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.*

"விஜய வாசம்",
வதிரி அம்மன் கோயிலடி,
வதிரி. (சி/552175)

**கந்தசாமிக் குருக்கள்** - அப்பா,
**பார்வதி** - அம்மா.

## இளங்கலைஞர் மன்றம்
## வெற்றிடம்-வீணை ஆசிரியர்

எமது மன்றம் நடத்தும் இசை வகுப்புகளில் வீணை கற்பிக்க ஆசிரியர் தேவை.

விண்ணப்பங்கள், தகைமைச் சான்றிதழ்களின் பிரதியுடன் 10.04.2008ஆம் திகதிக்குப் பிந்தாமல் மன்றப் பணிமனைக்குக் கிடைக்கவேண்டும்.

இளங்கலைஞர் மன்றம்
சட்டநாதர் வீதி, நல்லூர். (சி/552198) **செயலாளர்.**

## இடமாற்றம்

*இராமையா செட்டியார் வீதியில்* இயங்கி வந்த

**கண்சத்திர சிகிச்சை நிலையம்**

**யாழ்ப்பாணம் நர்சிங் கோம்**

**Jaffna Nursing Home**

*இல. 174, முதலாம் குறுக்கு வீதியில்*

(வேம்படி சந்திக்கு அருகில்) இயங்குகிறது.

வெளிநோயாளர் பிரிவு - OPD
வைத்திய நிபுணர் ஆலோசனை - S.CHANNELING
வார்ட்டில் தங்கி சிகிச்சை பெறுதல் - IN WARD
கண் சிகிச்சை - EYE CLINIC
கண் சத்திர சிகிச்சை - EYE SURGERY
பொது சத்திர சிகிச்சை - GENERAL SURGERY

ஆகிய வசதிகளுடன் இயங்குகின்றது.

(72882) [illegible]


**அன்னதான மண்டபம் புதிதாக அமைப்பு**

யாழ்ப்பாணம்,ஏப்.7

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் அன்னதான மண்டபம் ஒன்று பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் திருவிழா கடந்த 2ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. இந்த நாள்களில் தினமும் பக்தர்களுக்கு இந்த மண்டபத்திலேயே அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றன. (203-224)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*எமது பாடசாலை ஆசிரியரும் பகுதித் தலைவருமான*

**திரு.குழந்தைவேலு பாஸ்கரன்**

(B.Com., Dip. in Edu.)



*அவர்கள் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் முதுமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன் அவர் மேலும் பல சிறப்புக்களையும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யா/கம்பர்மலை வித்தியாலயம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**முக்கிய அறிவித்தல்**

**வெளிவாரிப் பரீட்சைகள் -2007**

1. வணிக முதற் தேர்வு - 2006
2. வணிகமாணி பகுதி-I - 2005 & 2006
3. வணிகமாணி பகுதி-II - 2004 & 2005
4. வணிகமாணி பகுதி-III - 2004

மேற்படி வெளிவாரிப் பரீட்சைகளில், வணிக முதற் தேர்வு மற்றும் வணிகமாணி பகுதி - II ஆகிய பரீட்சைகளை மே மாத இறுதிப்பகுதியிலும், வணிகமாணி பகுதி - I மற்றும் வணிகமாணி பகுதி-III ஆகிய பரீட்சைகளை ஜூன் மாத முதற் பகுதியிலும், நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இம்முறை வெளிமாவட்ட மாணவர்களின் நன்மை கருதி, வவுனியா வளாகத்திலும் மேற்படி பரீட்சைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதால், வவுனியா வளாகத்தில் மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றவிரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு மாணவர் பெயர், பதிவிலக்கம், சுட்டிலக்கம் மற்றும் தோற்றவிருக்கும் பரீட்சையின் பெயர் ஆகிய விவரங்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

03.04.2008 (சி/552175) **பதிவாளர்.**


## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் செந்திவேல்



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் செந்திவேல் 04.04.2008 கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் கோவிந்தராசன், திருக்குமார், கமலராசன், சசிகலா, ஜெனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் லிங்கேஸ்வரி, வவி ஆகியோரின் மாமனும் சீதாலட்சுமி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் கணேஸ், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் இராசாத்தி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தேவசேனா, சற்குணாம்பாள், நவரெத்தினம் மற்றும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் நடேசு, சிவலிங்கம், நாகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஜனனி, ஜஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.04.2008 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொழும்பு, அளுத் மாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*35/1, குமார வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (72833)

தகவல்:
**கணேஸ்** *(சகோதரர்).*

### சதாசிவம் இரட்ணபாலா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இரட்ணபாலா 04.04.2008 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சதாசிவம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் பிறக்லி - மேரி (இத்தாலி) தம்பதியரின் மருமகனும் யசிந்தாராணியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி, விஜயந்தி, டானியல் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதானந்தன், சந்திரபாலா, சூரியபாலா, உதயபாலி, உதயகலா, தவச்செல்வி, கருணபாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கீதா, உஷா, சியாமளா, ஜெகதீஸ்வரன், ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற சிவநேசன், புஸ்பா, கிறக்கறி லூயில், கிறக்கறி கிறேஸ், லூயிஸ் பரமேஸ்வரி, கிறேஸ் நாகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (08.04.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (சி/552197)

தகவல்:
**சதாசிவம்** *(தந்தை).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசார்பற்ற நிறுவனங்கள்

# 277 மில்லியன் ரூபா செலவில் 39 திட்டங்களை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்வதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.7

ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டின் முதல் காலாண்டிற்கு 277 மில்லியன் 9ஆயிரத்து 313 ரூபா செலவில் 39 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ். அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனங்களால் யாழ்.மாவட்ட மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட திட்டங்களில் 39 திட்டங்களுக்கு குழு அனுமதி வழங்கியுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் 53 மில்லியன் 372 ஆயிரத்து 30 ரூபாவில் 5 திட்டங்களும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு 2 மில்லியன் 89 ஆயிரம் ரூபாவில் ஒரு திட்டமும் கிறிஸ்தவ உதவி நிறுவனம் 40 மில்லியன் 849 ஆயிரத்து 575 ரூபாவில் 4 திட்டங்களும் -

ஜிரிசற் நிறுவனம் 22 மில்லியன் 719 ஆயிரம் ரூபாவில் 4 திட்டங்களும், இடம் பெயர்ந்தோருக்குகான சர்வதேச நிறுவனம் 5 மில்லியன் 30 ஆயிரத்து 624 ரூபாவில் 5 திட்டங்களும், உலக தரிசன நிறுவனம் 35 மில்லியன் 703 ஆயிரத்து 650 ரூபா செலவில் 12 திட்டங்களும்-

பேரூட் நிறுவனம் 43 மில்லியன் 905 ஆயிரத்து 533 ரூபாவில் ஒரு திட்டமும், பார்க் நிறுவனம் 3 மில்லியன் 623 ஆயிரத்து 750 ரூபா செலவில் ஒரு திட்டமும், உலக கனேடிய பல்கலைக்கழக சேவை 59 மில்லியன் 859 ஆயிரத்து 301 ரூபா செலவில் 2திட்டங்களும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் 9 மில்லியன் 856 ஆயிரத்து 850 ரூபா செலவில் 4 திட்டங்களும் யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டின் காலாண்டுக்கு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (202)

## அரச அலுவலர் தமது நியமனத் திகதியிலிருந்து ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்படுவர்

அரச அலுவலர்கள் ஒவ்வொருவரும் நியமனத் திகதியிலிருந்து ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்கள் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு திரட்டிய வேதனத்திலிருந்து ஆறு வீதத்தை உதவித் தொகையாக செலுத்த வேண்டும்.

மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் கடிதம் மூலம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

கடந்த 2003ஆம் ஆண்டு தொடக்கம் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டே அரச அலுவலர்கள் அனைவரும் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டு வருகின்றனர்.

பங்களிப்பு ஓய்வூதிய நிதியத் திட்டத்தில் இணைக்கப்பட்ட அரச அலுவலர்கள் இதுவரை பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு மாதாந்த சம்பளத்திலிருந்து எட்டு வீதத்தினை செலுத்தி வந்துள்ளனர்.

மாகாண பிரதிப் பிரதம செயலாளரின் கடிதப் பிரகாரம் இவ் அலுவலர்கள் நியமனத் திகதியிலிருந்து ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு திரட்டிய வேதனத்திலிருந்து ஆறு வீதத்தினை உதவு தொகையாக செலுத்தப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (202-207)

## செல்லப்பா சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம்,ஏப்.7

நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 93ஆவது குருபூசை இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்குசெல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

தேவார திருவாசக பண்ணிசைப் பாராயணம், நற்சிந்தனைப் பாடல்கள் பாராயணம், பூசைகள் என்பன குருபூசை நிகழ்வில் இடம்பெறும். (202)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.இந்துக் கல்லூரியின் ஸ்கிறபிள் கழகத்தால் வெளியிடப்பட்டு வரும் சஞ்சிகையான 'Jaffna Scrabbler' Vol III இன் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் நிகழ்வில் பங்குகொள்ளும் பாடசாலைகளுக்கான சினேகபூர்வ சுற்றுப் போட்டியும் நடைபெறவுள்ளது என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (203)

## கைதடி திருட்டுச் சம்பவம் தொடர்பாக சிப்பாய் கைதாகி விளக்க மறியலில்

யாழ்ப்பாணம்,ஏப்.7

கைதடி சந்திக்கு அருகில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக அப்பகுதி முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாயை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள், பணம் ஆகியவையும் மீட்கப்பட்டன

இச்சம்பவம் பற்றி தெரியவருவருவதாவது:

கடந்த முதலாம் திகதி இரவு கைதடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவை திருட்டுப் போயுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக வீட்டுக்கு அருகில் உள்ள முகாமைச் சேர்ந்த படைச் சிப்பாயை பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்தனர்.

**மக்களுக்குப் பொறுப்புணர்வு தேவையென நீதிபதி அறிவுறுத்து**

இவ்வழக்கினை விவரித்த நீதிவான் சிப்பாயை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் பொதுமக்களின் பொறுப்புணர்வின்மையை பெரிதும் சாடினார்.

நீதிவான் தனது அறிக்கையில் தற்போதைய சூழ்நிலையில் மக்கள் தத்தமது உடைமைகளை பொறுப்புடன் பாதுகாக்க வேண்டும். மாறாக அவதானமின்றியும் பொறுப்புணர்வின்றியும் செயற்படுவது குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு தூண்டுதலாக அமைகிறது. மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் எத்தனையோ குற்றச் செயல்களை தவிர்க்க முடியும் - என்றார். (1-207)

## யாழ். மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களில் 'கோப் சிற்றி'கள் விரைவில் திறக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 'கோப் சிற்றி' களை விரைவில் திறப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பெ. சிவலிங்கம் இவ்வாறு கேட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாவட்டத்தில் உள்ள 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கோப்சிற்றிகளைத் திறந்து வைப்பதற்கான தளபாட வசதி மற்றும் பொருள்கொள்வனவுக்கென ஒவ்வொரு 10 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கோப் சிற்றிகளை புத்தாண்டுக்கு முன்னர் திறந்து வைக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் சங்கங்களை கேட்டபோதும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கோப் சிற்றிகளை ஆரம்பிப்பதற்கான துரித ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

அவையும் புத்தாண்டுக்கு முன்னர் திறந்துவைக்கப்படுமா அதற்கான பணிகள் முற்றுப்பெறுமா என்பதும் கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

எனினும் இந்த மாத இறுதிக்குள் அவற்றைத் திறந்து வைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறேன் - என்று கூறினார். (203-224)

## அச்சுவேலிக் கிளை 'கோப் சிற்றி'களைத் திறக்கவுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.7

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புத்தாண்டுக்கு முன்னர் 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்களை திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கம் இரண்டு 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளது. ஆவரங்கால் பகுதியில் ஒரு கோப் சிற்றி விற்பனை நிலையமும் அச்சுவேலி நகர்ப்பகுதியில் மற்றைய நிலையமும் திறக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. (203-224)

## இளம் சந்ததியினர் தொழில்வாய்ப்புத் தேடி வெளிநாடு செல்வதால் முதியோர் தகுந்த பராமரிப்பு இன்றி இங்கு சிரமப்படுகின்றனர்

### நீதிபதி வசந்தசேனன் கவலை

வலி.தென்மேற்கு,ஏப்.7

இளம் சந்ததியினர் தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று விடுவதால் முதியோர்கள் இங்கு தகுந்த பராமரிப்பு இன்றி சிரமப்பட்டு வருவதை பல இடங்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. எதிர்காலம் குறித்து ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

முதியோர் இல்லங்களை எவரும் திறக்கலாம். ஆனால் அவற்றை நிர்வகித்து பராமரிப்பது மிகவும் கஷ்டம்.

இந்தப் பெரிய பொறுப்பை ஏற்று, சுமைகளை ஏற்று சிவபூமி இல்லம் இயங்கி வருகிறது.

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்ல பாலச்சந்திரன் அரங்கில் ஆறு. திருமுருகனின் 'ஆஸ்திரேலியா ஆன்மீக உரைகள்' ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்துகையில் யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இப்போது நல்ல சமூக சேவைகளைச் செய்வதற்கு எல்லோரும் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். கல் எறிவிழும் என்றும் பயந்து ஈடுபடத் தயங்கும் நிலை நிலவுகின்றது.

சமூகத்தினது நன்மையை கருத்திற்கொண்டு சேவை செய்வோமானால் இறைவன் அருள் கிட்டும்.

இப்போது நடப்பது கலியுகம். கடவுள் நம்பிக்கையும் குறைந்துகொண்டு வருகின்றது.

ஆனால் இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். பாவங்களைச் செய்பவர்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். எமது சைவ சமயமானது தலைசிறந்த சமயம். இதில் எல்லா விடயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் நாம் அவற்றைச் சரியாகக் கடைப்பிடிக்க தவறி விடுகின்றோம். அதனால் சமுதாயம் இந்த நிலைக்குக் கீழ் இறங்கி போய்க்கொண்டிருக்கின்றது - என்றார்.



இளைப்பாறிய அதிபரும், எழுத்தாளருமான மூதறிஞர் சிவசரவணபவன் (சிற்பி) நூல் நயப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

வேற்றுமதச் சூழலில் வெளிநாடுகளில் வசிக்கும் எமது மக்களில் பலரும் தங்கள் பிள்ளைகளும் சைவ சமய விழுமியங்களையும் தத்துவங்களையும் நன்கறிந்து வாழவேண்டும் என்று ஆவல்கொண்டிருப்பதை அறிய முடிகின்றது.

ஆங்கிலமொழியில் சைவத்தைப் பற்றியும் ஆன்மீக கருத்துகளையும் வெளியிடுவதன் மூலமும் இக்கருத்துகள் எதிர்கால சந்ததியினரிடம் சென்றடைய ஏதுவாகின்றது. ஆறு திருமுருகனின் சொற்பொழிவுகள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பது ஒரு புதிய அரிய முயற்சியாகும். காலத்திற்கு மிகவும் தேவையான செயற்கரிய முயற்சிகளை இறைவன் அருளோடு அவர் மேற்கொண்டு வருகின்றார் - என்றார். (203-135)








கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மகளிர்தின நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும் அருட்சகோதரி வலன்ரின் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். அருட்தந்தை எஸ். டேமியன் உரையாற்றுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை
திருமதி பத்மாவதி தியாகராசா அவர்
## சேவைநலன் பாராட்டு



அகவை அறுபதில்
கால் பதிக்கும்
எங்கள் நல்லாசான்
திருமதி பத்மாவதி
தியாகராசா
(Sp. Trd., B.A., SLTS - I)
கல்வி உலகம் கவின் பெற முப்பத்தாறு ஆண்டுகள் முனைப்புடன் பணிபுரிந்த எம் மூத்த ஆசிரியை மகளிர் கல்லூரியில் இருபத்து நான்காண்டுகள் சைவத்தையும் தமிழையும் கருத்துடன் கற்பித்தார். எம் அன்புக்குரிய ஆசிரியர் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க பல்லாண்டு.

கல்லூரிச் சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (72793)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்




எமது குடும்பத் தலைவர்
அமரர்
இராமலிங்கம்
கோபாலசிங்கம்
தோற்றம்
31✱01✱1955
மறைவு
08✱03✱2008

கடந்த 08.03.2008 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராமலிங்கம் கோபாலசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.04.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவடி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
குடும்பத்தினர். (72872)

## விண்ணக வாழ்வின் 90ஆவது நாள் நினைவஞ்சலி



அமரர்
## மைக்கல் எலிஸ்டன்

மலர்வு 01✱02✱1944
உதிர்வு 11✱01✱2008

ஏங்கும் விழிகளில் தேங்கிய நீருடன் அப்பா, அப்பா என்று கூவி அழைக்கின்றோம். இணை பிரியேன் எனத் துணை வந்தவரே! சிந்தனையில் சிறகு தோடுத்து இலட்சியக் கனவுகள் பல சுமந்து புது உலகம் படைக்க, புகுந்த வீடு வந்து ஆசையாய் வீடு கட்டி, அன்பாய் "மலர் இல்லம்" என்று பெயரிட்டு, வாழ்வோம் என்று வழிமொழிந்து வழி தெரியாமல் விண்ணகம் சென்றீரோ! கதைகள் பல சொன்னீர் காணும் கற்பனைகள் இதயத்தில் வடித்து வைத்தீர் இதயம் பிளந்து வதைகள் படும்போதும், "சில்லாலை நான் வருவேன்" எனச்சொல்லி பதை பதைக்க வைத்து, பாதி வாழ்வில் பரலோகம் சென்றீரோ! பட்டங்கள் பலபெற்று, பெருமிதமாய் பாரறிய முன்னேறும் உம்மக்களிருவரும் பலன் பெறும்வேளையில், விதி வந்து சதி செய்ததுவோ அப்பா! வேரறுந்த மரங்களில் பூத்து நிற்கும் மலர்களாக வாடுகின்றோம் உன் நினைவால் அன்பே! ஆருயிரே! வடமுனை தோட்டு தென்முனை வரை ஆயிரம் சொந்தங்கள் ஆறுதல் மொழி தந்தாலும் நீங்கள் இன்றி அனாதைகள் ஆகிவிட்டோம். கள்ளம் கபடமற்ற உங்கள் புன்னகை ஒன்றே போதும், எம்மை ஆறுதல்படுத்த மின்னாமல் முழங்காமல் நீங்கள் மறைந்து 3 மாதங்கள் ஓடிவிட்டதுவோ!

இவரின் ஆன்மசாந்திக்காக 09.04.2008 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வேண்டுதல் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவரின் மறைவுச் செய்தி கேட்டு, எம்முடன் துக்கம் பகிர்ந்தவர்களுக்கு எம் நன்றிகள்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி: மேரி ஆன் கிறேஸ்மலர் எலிஸ்டன்,
மகன்மார்: அன்ரன் ஜெயானந்த் எலிஸ்டன்,
ஜோ அஜந்த் எலிஸ்டன்.
(72717)

## ஆரம்பக்கல்வி கற்பித்தல் உபகரணப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.7

நல்லூர் கோட்ட மட்ட ஆரம்பக்கல்வி கற்பித்தல் உபகரணப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆரம்பித்துவைப்பார். (203)

## கணனி அலகு ஆரம்பம்

பருத்தித்துறை,ஏப்.7

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலய கணனி அலகு ஆரம்ப விழா அதிபர் மு.அனந்தீஸ்வரன் தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வை.செல்வராஜா பிரதம விருந்தினராகவும் சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்வித் திட்ட முகாமையாளர் மு.முத்துராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். இந்த வித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் 15 கணனிகளையும் அதற்கான தளபாடங்களையும் வழங்கியுள்ளது. (203-218)

## நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஏப்.7

மந்துவில் பிரதேச மக்களுக்கு 'சோஆ' நிறுவனத்தினரால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

'சோஆ' நிறுவனத்தினர் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் ஊடாக நுளம்பு வலைகளை மந்துவில் கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## பெறுபேறுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மாணவர்களும் மற்றும் தனிப்பட்ட முறையில் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் தமது விடைத்தாள்கள் மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களூடாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை உரிய கட்டணத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கமுடியும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (203-86)


### விற்பனைக்கு

இசுசு 4HF1.350 மொடல் வாகன இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஆஸ்பத்திரி முன்பாக, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.
(72851)

### கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி திக்கம் (கிளை)
O/L DAY CLASS (பிரிவு-I)
ஆரம்பம்: 09.04.2008 மு.ப.9.00 மணி
கணிதம்: திரு.யோகேந்திரன்
தமிழ்: திரு.ஐங்கரன்
விஞ்ஞானம்: திரு.பார்த்திபன், திரு.குகநேசன்
சமயம்: செல்வி சியாமினி
சமூகம்: திரு.ராகுலன்
ஆங்கிலம்: திரு.ஜெயதேவா
புவியியல்: திரு.டேவிட்
(சி/552136)

✱ 2010 (A/L) புதிய பிரிவுகள் ஆரம்பம்:
கலை, வர்த்தகம், உயிரியல், கணிதம்
✱ வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி மாணவர்களின் நலன்கருதி
வகுப்புகள் 8.30-1.00 மணிவரை நடைபெறும்.
NOTE: அனுமதியை முன்கூட்டியே பெறவும்.
(பிரிவு-II 18.04.2008 மு.ப. 9.00 மணி ஆரம்பம்)

### Sky Computer (Pvt) Ltd.

*Head Office:-* No.04, De vos Avenue, Colombo - 04
*Branches:-* No.162, Main Street, Jaffna.
(புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் அருகில்)
No.89, Kandy Road, Chundukuli, Jaffna.
(கச்சேரி அருகில்)
T.P No:- 021 4590325
Affiliated with Irish International University (U.K)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன
(08.04.2008 காலை 9.00 am)

Course Details
* Ms Office - 1 Month
* Desk Top Publishing - 1 Month
* Hardware Technologe - 1 Month
Kids Program சிறுவர்களுக்கான பயிற்சி நெறி - 2 Weeks
Internet & E-mail - 2 Weeks
E-Mail:- skycomputers_2@yahoo.com
Today you learn Tomorrow you lead


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.கு.ரவிச்சந்திரன் (B.A., Dip. in Edu., M.Edu.)




எமது பாடசாலையின் அதிபர்
திரு.கு.ரவிச்சந்திரன் அவர்கள்
முதுமாணிப் பரீட்சையில்
சித்தியடைந்தமையைப்
பாராட்டுவதோடு மேலும் பல
தேர்ச்சிகளும் பதவிகளும் பெற்றுப்
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் குழாம்,
யா/ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், புத்தூர். (72782)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 02 ★ 06 ★ 1953



உதிர்வு 10 ★ 04 ★ 2005

கைதடி கிழக்கு
அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா
(வள்ளல் வரதன்)

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
உங்களை மெழுகுவர்த்தியாக உருக்கி
எங்களின் வளமான வாழ்விற்காக
அல்லும் பகலும் அயராது உழைத்த
வள்ளல் பெருந்தகையே! அப்பா!
எங்கள் இதயக்கோயிலின் அணையாத
ஒளிவிளக்கே! எங்கள் தலைவா!
எம்முடன் சேர்ந்து வாழ்வின் வசந்தங்களை
அனுபவிக்க முன்பாக இறைவன்
தன்னிடம் அழைத்ததேனோ?
அன்புத் தெய்வமே! எமது உயிருள்ளவரை
என்றும் உங்கள் நினைவுகளுடனே
வாழ்வோம் அப்பாவே! உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

"சந்நிதி இல்லம்",
கைதடி கிழக்கு, கைதடி.
குடும்பத்தினர். (72865)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

974 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்
மீனம் 07 09 31 48
04-04-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5612132 - 5627919
ஜக்பொட் பரிசு ரூபா. 2,539,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 344,609 | 10/- | 3,446,090/- |
| 2 இலக்கங்கள் | 31,587 | 20/- | 631,740/- |
| 1 இல. + லக்கினம் | 31,233 | 30/- | 936,990/- |
| 2 இல. + லக்கினம் | 2,925 | 100/- | 292,500/- |
| 3 இலக்கங்கள் | 821 | 500/- | 410,500/- |
| 3 இல. + லக்கினம் | 96 | 5,000/- | 480,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,539,600/- | - |
| மொத்தம் | | | 6,597,820/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 411,280 | | 7,621,320/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,308,900/-

தொடர் இலக்கம் 4736887 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஏப்ரல் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 5623853-1-54 |
| மாத்தறை | 5613000-9-87 |
| கம்பஹா | 5623524-9-09 |
| கொழும்பு | 5626585-4-43 |
| களுத்துறை | 5618008-1-26 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 'வீரர்களின் துடுப்பாட்டப் போட்டி' நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், டாக்டர் அ.சக்திவேல், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி ஆகியோர் உரை யாற்றுவதையும் மேடையில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். போட்டிக்கான அனுசரணையை 'உதயன்' வழங்கியிருந்தது. (203)

கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத் துடுப்பாட்டம்

# யாழ்.சென்ரல் வி.க. அணி பல்கலையை வென்றது

வலி.வடக்கு,ஏப்.7

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப் பட்டுவரும் 30 ஓவர்கள் மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டமொன்றில் யாழ்ப்பா ணம் சென்ரல் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ்ப் பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளை யாட்டு அணியும் மோதிக்கொண்டன.

29.2 ஓவர்களில் அனைத்து விக்கெட் டுகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜசிந்தன் 66 ஓட்டங்களையும் ரஜீவ் குமார் கனிஸ்டன் ஆகியோர் தலா 19 ஓட் டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

நிதர்சன் 4.2 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் பவி 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் நிசாந்தன், லவகாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல் கலைக்கழக அணி 24 ஓவர்களில் 100 ஓட் டங்களை மட்டும் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

நிசாந்தன் 20 ஓட்டங்களைப் பெற்றார். விமலகாந் 6 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட் டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சத்தி யன் 5 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்டுகளையும் யசிந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ரஜீவ்குமார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் சென் ரல் ,விளையாட்டுக் கழகம் 71 ஓட்டங் களினால் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (86)

## யாழ்.,நல்லூர் கோட்ட விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.5

நல்லூர் - யாழ். கோட்டங்களின் பாட சாலைகளுக்கு இடையிலான விளையாட் டுப் போட்டிகள் இன்று முதல் மூன்று தினங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதா னத்தில் இடம்பெறவுள்ளன.

கடந்த மாதம் 19ஆம் திகதி இந்தப் போட்டிகள்இடம்பெறவிருந்தன. மழை காரண மாக போட்டிகள் இடம்பெறவில்லை. (1)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வலிகாமம் வலய கரபந்தாட்டம்; மகாஜன கேடயத்தை சுவீகரித்தது

வலி.வடக்கு,ஏப்.7

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரபந்தாட் டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி வலிகாமம் வலய சம்பிய னாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிபழை மகாஜனக் கல்லூரியும் சங் கானை சிவப்பிரகாசம் வித்தியாலமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட் டியில் இறுதி இரண்டு நேர் சுற்றுக்களை வெற்றிகொண்டு மகாஜனக் கல்லூரி சம்பி யானாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை எந்த அணி வெற்றிபெறும் என்பதை யாரும் கூறமுடியாது இறுதிவரை இரு அணிகளும் மிகவும் போட்டியாக விளை யாடி அனைவரினதும் பாராட்டைப் பெற் றுக் கொண்டார்கள்.

முதலாம் சுற்றை சங்கானை சிவப்பிர காசம் மகாவித்தியாலயம் 26.24 புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கிக் கொண்டது.

இரண்டாம், மூன்றாம் சுற்றுக்களை மகாஜனக் கல்லூரி 25.23, 25.23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட் டுள்ளது. (1-86)

## சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் சாதனை

யாழ்ப்பாணம்,ஏப்.7

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாட சாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் பெண்கள் பிரிவில் 21 முத லாம் இடங்களையும் 16 இரண்டாம் இடங் களையும் 12 மூன்றாம் இடங்களையும் பெற்று இளவாலை கன்னியர் மடம் ம.வி. முன்னிலையில் திகழ்கிறது.

15 வயதின் கீழ்ப் பிரிவில் செல்வி சுபா சினி யோகராசாவும் -

17 வயதின் கீழ்ப் பிரிவில் செல்வி பகீ ரதி சுப்பிரமணியமும் -

19 வயதின் கீழ்ப் பிரிவில் செல்வி ஆரோக்கியறொபின்சி கயித்தாம்பிள்ளை யும் சிறந்த வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்களுக்கான அனைத்துப் போட்டி களிலும் 15 வயதின் கீழ்ப் பிரிவினர் 28 புள்ளிகளு டன் முதலாம் இடத்தையும் - 17 வயதின் கீழ்ப் பிரிவினர் 36 புள்ளிகளுடன் முதலாம் இடத்தையும் - 19 வயதின் கீழ்ப் பிரிவினர் 47புள்ளிகளுடன் முதலாம் இடத் தையும் - 21 வயதின் கீழ் பிரிவினர் 35 புள்ளி களுடன் முதலாம் இடத்தையும் பெற்று சிறந்த குழுக்களாகவும் தெரிவுசெய்யப்பட் டுள்ளன.

இப்பாடசாலை அஞ்சலோட்ட நிகழ்வு களில்ஒருபோட்டியைத்தவிரஏனைய அனைத் துப் போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று அஞ்சல் ஓட்டத்திற்கான கேடயத்தை யும் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து 7 வருடமாக அஞ்சலோட்டத்திற்கான கேட யத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பி டத்தக்கது.

உடற்கல்விக்கென ஆசிரியர் ஒருவர் இல்லாத போதிலும் பயிற்றுவிப்பாளராக செயற்படும் ஆசிரியர் செ.பீ.பியன்வெனு வின் அர்ப்பணிப்பான சேவையும் மாண வர்களின் முயற்சியும் திறமையும் பாராட் டுக்குரியன எனத் தெரிவிக்கப்பட்டது.(1)

## யாழ்.சென்றல் 4 விக்கெட்டுக்களால் வெற்றி

வலி.வடக்கு,ஏப்.7

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக் கெட் போட்டியொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோ தயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் (யாழ்.சென்றலும்)மோதிக் கொண்டன. -

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி 46.4 ஓவர்களில் 147 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்தது.

கரன் 25, விஜிதரன், நிசாகரன் தலா 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சோபிகன், செல்ரன் ஆகியோர் முறையே 35, 21 ஓட்டங்களுக்கு தலா 3 விக்கெட் டுக்களையும் ஸ்ரீபன்ராஜ் 16 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற் றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 51.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட் டங்களைப் பெற்றுக்கொண்டது.

சிவகரன் 34, டயான் 26, நநநீதன் சோபி கன் தலா 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

கே.விஷ்ணுபிரசாத் 22.5 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டு களையும் நிறோசன் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத் தாடிய ஸ்கந்தவரோதையக் கல்லூரி 37 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கே.பொன்ஜோய் 51, ரிசாகரன் 14 ஓட்ட ங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

நவநீதன் கோபிகன் முறையே 22, 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப் பற்றினார்கள்.

104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற அடிப்படையில் துடுப்பாட களமிறங் கிய யாழ். மத்திய கல்லூரி 28 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட் டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களின தும் ஓர் ஓட்டத்தினாலும் வெற்றிபெற்றது. எஸ்.விஜிதரன் ஒரு ஓவர் பந்து வீசி ஓட்ட மில்லாது ஒரு விக்கெட்டையும் நிரோஜன், விஷ்ணுபிரசகாஸ் முறையே 32, 43 ஓட் டங்களையும் கொடுத்து தலா ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## பழைய மாணவர் அணியை வென்றது பல்கலை. அணி

வலி.வடக்கு,ஏப்.7

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளை யாட்டு அணிக்கும் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் அணிக்கும் இடையே இடம்பெற்ற 50 ஓவர்களுக்கு மடடுப்படுத் திய கிரிக்கெட் போட்டியில் பல்கலைக் கழக விளையாட்டு அணி வெற்றி பெற் றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளை யாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 49.4 ஓவர்களில் 203 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

சதர்வானந் 96, நிருசன் 30, பிரசன்னா 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

றொபேசன் 10 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், நிதர்சனன் 07 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பல் கலைக்கழக பழைய மாணவர் அணி 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 127 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

சர்வானந் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட் டங்களுக்கு 04 விக்கெட்டையும் ரவிசங்கர் 07 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் ஜெயந்தன் 24 ஓட் டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப் பற்றினார்கள். (1-86)



நெடுந்தீவு [illegible] போட்டிகளை வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் மங் கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் வெற்றியீட்டிய மாணவன் [illegible] ருவனுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நெடுந்தீவு உதவி அரச அதிபா என்.திருலிங்கநாதன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம் (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகமகிழ்கின்றோம்



எமது கல்லூரி விஞ்ஞான
ஆசிரியராக நீண்ட காலம்
சேவையாற்றி தற்போது,
யா/ கரவெட்டி கிழக்கு அ.த.க.
பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்று
இனிதே சேவையாற்றிவரும்

**திரு.இரத்தினசபாபதி**
**சிவசங்கர்**

(B.A., Dip. in Edu.Sp.Trd.in Sci.)
அவர்களைப் பாராட்டி அகமகிழ்கிறோம்.

வல்வெட்டித்துறை.

ஆசிரியர் கழகம்,
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(72869)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தை
ஆரம்பித்தவர்களில்
ஒருவரும் அதன் முதலாவது
செயலாளருமாகிய

**செல்லையா சின்னத்துரை**

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

*நந்தாவில் அம்மன் கோயிலடி,*
*கொக்குவில்.* (72885)

மனோன்மணி சனசமூக
நிலையத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய அதிபரும்
பிரபல சமூகசேவையாளருமான

**யோசேப் பூராசா** *(J.P.)* அவர்கள்


*காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த
கவலை அடைகின்றோம். அன்னாரின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனு தாபத்தைத்
தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார் திக்கின்றோம்.*

*2 ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (72876)

சிவானந்தம் புஸ்பலதா
குடும்பத்தினர்,
காந்தன் குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 21 |
| 03 | 04 |
| 1933 | 2004 |



**அமரர் ஐயம்பிள்ளை கந்தையா**
(மண்கும்பான்)

நிஜங்கள் எல்லாம்
நிழலாகிப் போனதே - ஐயா!
நினைவுகள் எல்லாம்
கனவுகள் தானோ ஐயா!
கனதூரம் நீங்கள் போனாலும்
காதில் உங்கள் குரல் ஒலிக்குதையா.

*20/33, ஆஸ்பத்திரி வீதி,*
*வைரவர் கோயில் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (72876)

மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த தம்பி ஐயா தம்பிராசா என்பவருடைய தே.அ.அ. (380782480V) சாரதி அ.அ.இல (A012749014)ஆகியன கோப்பாய்ச் சந்திக்கும் ஆவரங்கால் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவும். சன்மானம் வழங்கப்படும்.

*முகவரி:-* திரு.இ.அருட்செல்வம்
*நியூ சயன்ஸ்கோல், யாழ்ப்பாணம்.*

(72881)

## கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRA** புறொயிலர் குஞ்சுகள் 19.04.2008 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

* **ராஜீவ்** - நவாலி வீதி,ஆனைக்கோட்டை
* **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* **திருமகள் களஞ்சியம்** - சிவலிங்கப் புளியடி
* **கோல்டன் பாம்** - பருத்தித்துறை
* **P.ரவி** - சாவகச்சேரி
* **சிற்றி பாம் ரேடேர்ஸ்** - கல்வியங்காடு.

(72884)

## வருமான மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.7

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் வருமான மேற்பார்வையாளர் வகுப்பு II இல் கடமையாற்றுவோருக்கு வகுப்பு I பதவி உயர்வு வழங்கப்படவுள்ளன. இதற்கான விவரங்கள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

வருமான மேற்பார்வையாளர் வகுப்பு I இற்கு தகைமையுடைய உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றிய/ கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதம், ஆளணி மற்றும் வெற்றிடம், வரலாற்றுத்தாள், பதவியில் உறுதிப்படுத் திய கடிதம், முழு மற்றும் அரைநாள் சம்பளமற்ற விடுமுறை, வேலை நடத்தை ஆகிய விவரங்களுடன் பதவியுயர்வுக்கான திணைக்களத் தலைவரினால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சிச்சபை செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.7

அரியாலை ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிசேகம் இடம்பெற்றுத் தொடர்ந்து வசந்த மண்டபப்பூசை, அபிஷேகம் என்பன இடம்பெறும்.

13ஆம் திகதி வருடப்பிறப்பு தினத்தன்று விசேட பூசைகள் இடம்பெறும்.

17ஆம் திகதி மாலை 3.45 மணிக்குத் தெருவீதியுலாவும் 18ஆம் திகதி திருக்குளிர்த்தி அபிஷேகம், அன்னதானம் என்பனவும் விசேடமாக இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.7

கைதடி வீரகத்திப் பிள்ளையார்ஆலய வருடாந்த மணவாளக் கோலமும் சங்காபிசேகமும் இன்று காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு விசேட பூசைகள் திருவூஞ்சல் என்பன இடம் பெறும்.

இதே வேளை இந்த ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் முற்பகல் 10.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-288)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.7

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா இடம்பெறும்.

பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் திங்கட்கிழமை காலை வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தக் கரையிலும் இடம்பெறவுள்ளன. (202-250)

* * *

சுழிபுரம்,ஏப்.7

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய ஆலய இலட்சார்ச்சனை நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும்11ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட பூசைகள் நடைபெற்று மாலை சுவாமி வீதியுலா இடம் பெறும். (203-28)


## கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

**விடுமுறைக் கால 12 நாட்கள் வகுப்புக்கள்**

பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் மற்றும் மகளிருக்குமானது.

* பப்றிக் வர்ணம் தீட்டுதல்
* பூ வேலை
* கைவேலை
* கூந்தல் அலங்காரம்
* அடிப்படைத் தையல்
* சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
* அடிப்படை Facial அழகுக்கலை மற்றும் மணப்பெண்கள் அலங்காரம்

**ஆரம்பம் - 10-04-2008 வியாழன் காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம். நிர்வாகி.


## ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 25 | 07 |
| 06 | 04 |
| 1975 | 2007 |



**அருமைநாதன் தயாபரன்**

ஆண்டொன்று என்ன பலநூறு கழிந்தாலும்
நீங்கள் பூத்திருக்கும் எம் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள் என்றும் மறையாதிருக்கும்.

*17/2, புகையிரதக்கடவை,*
*சுண்டுக்குளி.* (72879)

குடும்பத்தினர்.

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அவனியில் | அவனடியில் |
|---|---|
| 22 | 07 |
| 07 | 04 |
| 1943 | 1989 |



அமரர்

**கனகரட்ணம் பரராஜசிங்கம்**

(முன்னாள் உதவி அரச அதிபர்-S.L.A.S.)
(07.04.2008)

அகிலத்தை விட்டோடி
ஆண்டுகள் 19 ஆனபோதும்
ஆறவில்லை எம் இதயங்களின் வேதனை
எமக்கு மட்டும் சொந்தம்
உங்கள் நினைவுகள் தரும் துயரம்
என்றும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்களை மறவோம்.

*15, ஆடியபாதம் றோட்,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (சி/552194)

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டி நிற்கும்*
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவு



**மரியதாஸ் புஸ்பராணி**

| பிறந்த திகதி | இறந்த திகதி |
|---|---|
| 19.04.1953 | 07.04.2007 |

**நெஞ்சைத் தொட்ட நிகழ்வுகள்**

கொழும்புத் துறையில் பூத்த புதுமலரே!
கொழுநன் மரியதாசுக்குக் கிடைத்த புஸ்பராணியே!
குடும்பத்தில் நான்காவதாக உதித்த மயிலே!
குடும்ப உறவில் இருபத்தெட்டு ஆண்டுகள் ஒளிவீசிய பொற்சிலையே!
முட்டுநோய் முக்காடிட்டபோதும்
மற்றவர்களோடு முட்டிக்கொள்ளாத முகவரியே!
முட்டுப்பட்டு உதவிகேட்டு வந்த ஏழைகட்கு
தட்டு நிறைய உதவிசெய்த முந்தானையே!
தாரமாக வந்து தாய்மைக்காக ஏங்கி நின்ற தாரகையே!
தாரத்தை விட்டுக் கொடுக்காமல்
தத்தெடுத்து தாயான தாமரையே!
தத்தெடுத்த மகன் தாரத்தோடு வந்தபோது
களிப்போடு கட்டியணைத்த தாயே!
தாரத்தோடு வந்த மகன் தலையெடுக்குமுன்னே
தலைசாய்த்து மரணித்த தாயே!
தாய் இறந்த செய்தி கேட்டு துடித்தான் அவள் வளர்த்த மகன்!
தாய்சென்ற பாதையிலே என்னைத் துடிக்க விட்டு
தன்னையே மாய்த்துக் கொண்டான் மகன்!

*119, கொழும்புத்துறை வீதி,*
*கொழும்புத்துறை.* (72863)

அ.மரியதாஸ் *(கணவர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கையில் அவியும் பருப்பு!

இலங்கையின் இனப்பிரச்சினையை ஒட்டிய கோர யுத்தம் தொடர்பாக செய்தி நிறுவனங்கள் - குறிப்பாக வெளிநாட்டு ஊடகங்கள் - வெளியிட்டு வரும் புதினங்களில் ஒரு முக்கிய விடயம் விசேடமாக அமைந்திருப்பதைக் காணலாம். ஒவ்வொரு நாளும் யுத்தத்தில் உயிரிழக்கும் புலிகளின் எண்ணிக்கை என்று தெரிவித்து இலங்கை அரசுத்தரப்பு வெளியிடும் புள்ளி விவரங்கள் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களால் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்படுகின்றன.

இந்த விடயத்தை ஒட்டி இலங்கையின் மூத்த படை அதிகாரி ஒருவர் அவ்வப்போது பகிரங்கமாக வெளியிட்டு வந்த தகவல்களை வரிசைப்படுத்தி, ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று நியாயமான சில கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. அந்த வினாக்களை ஒரு தடவை இங்கு நோக்குவது பொருத்தமானது.

கடந்த ஆண்டு (2007) மே மாதம் இந்தியாவின் 'ஹிண்டுஸ்தான் டைம்ஸ்' ஊடகத்துக்கு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா சில விடயங்களைக் கூறியிருந்தார்.

*''புலிகளிடம் இப்போது நான்காயிரம் உறுப்பினர்களே உள்ளனர். அவர்களும் திறமைசாலிகள் அல்லர். அவர்களில் சுமார் இரண்டாயிரம் பேரை அழிப்போமானால் புலிகள் இயக்கத்துக்கே முடிவு கட்டியதாகிவிடும்.''* - என்று அவர் அதில் கூறியிருந்தார்.

இந்தப் பேட்டி வழங்கி ஏழு மாதங்களின் பின்னர் - இந்தக் காலப் பகுதியில் அவ்வப்போது பாதுகாப்புத் தரப்பு விடுத்த அறிவிப்புகளின் கூட்டுத்தொகைப்படி சுமார் 2 ஆயிரத்து ஐந்நூறு புலிகள் கொன்றொழிக்கப்பட்ட நிலையில் - 2007 டிசம்பர் மாதம் கடைசியில் 'த சண்டே ஒப்சேர்வர்' வார இதழுக்குத் தகவல் வெளியிட்ட அதே இராணுவத் தளபதி புதிய கருத்தை முன்வைத்தார்.

*''இன்னும் மூவாயிரம் புலிகளே எஞ்சியிருக்கின்றனர். அடுத்த ஆறு மாதங்களில் - அதாவது ஜூன் 2008 இற்குள் - புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிடுவர்''* - என்று மீண்டும் சூளுரைத்தார் இராணுவத் தளபதி.

இராணுவத் தளபதியின் சொந்தக் கூற்றின்படி நாலாயிரமாக இருந்த புலிகளின் எண்ணிக்கை - ஆறு மாதங்களில் - அரச அறிவிப்புகளின் பிரகாரம் இரண்டாயிரத்து ஐந்நூறு புலிகள் புதிதாக அழிக்கப்பட்ட நிலையில் - திரும்பவும் மூவாயிரமானது எவ்வாறு என்பது புரியவில்லை.

அடுத்த நாளைய - டிசம்பர் 31 ஆம் திகதி - 'த டெய்லி நியூஸ்' என்ற அரசு சார்பு தினசரிக்குப் பேட்டியளித்த இராணுவத் தளபதி, தினசரி பத்துப் புலிகள் என்ற சராசரி வீதத்தில் புலிகளை அழித்து ஒழிப்பது தமது உத்தேசம் என்று அதில் குறிப்பிட்டார். 2008 ஆம் ஆண்டில் யுத்தம் ஒரு முக்கிய - தீர்க்கமான - கட்டத்துக்குள் நுழைகின்றது என்றும் அதில் குறிப்பிட அவர் தவறவில்லை.

ஓர் இராணுவத் தளபதி தனது பதவியின் உச்ச நிலையில் ஆகக் கூடியது நான்கு தடவைகள் மாத்திரமே தலா ஒரு வருடம் கொண்ட சேவை நீடிப்புகளைப் பெறமுடியும். அந்த வகையில் இப்போது தமது நான்காவது வருட சேவை நீடிப்பில் இருக்கும் இராணுவத் தளபதி இந்த ஆண்டு டிசெம்பருடன் பதவி விலக வேண்டியவராகின்றார்.

இந்நிலையில், இந்த ஆண்டு முற்பகுதியில் - ஜனவரி 11 ஆம் திகதி - அளவில் இலங்கையில் உள்ள வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் ஊடகவியலாளர்களை அவர் சந்தித்தார்.

தினசரி பத்துப் புலிகளையாவது சராசரியாகக் கொன்றொழிப்பது தமது திட்டம் என்றாலும், அதையும் மீறி தினமும் குத்துமதிப்பாக இருபது புலிகளை அரச படையினர் கொன்றொழித்து வருகின்றனர் என்றும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

தமது பதவிக்காலம் முடிவதற்குள் புலிகளின் பிரச்சினையைத் தாம் தீர்த்துக்கட்டி விடுவார் என்றும் -

தமக்குப் பின்னர் அடுத்துப் புதிய இராணுவத் தளபதியாக வருபவருக்கு இந்தப் பிரச்சினையைத் தாம் விட்டுச்செல்ல மாட்டார் என்றும் -

அந்தச் சந்திப்பின்போது இராணுவத் தளபதி உறுதி கூறியிருந்தாராம்.

இந்தத் தகவலை வெளியிட்டு சரியாக ஒரு மாதத்தின் பின்னர் சுதந்திர தினத்தை ஒட்டி - பெப்ரவரி 10 ஆம் திகதி - சிங்கள வார இதழ் ஒன்றுக்குக் கருத்து வழங்கிய இராணுவத் தளபதி அதில் புலிகளின் யுத்த வல்லமையை மேலோட்டமாகப் புகழவும் தவறவில்லை.

*''புலிகள் இயக்கம் பழுத்த அனுபவத்தோடு அமைந்த நன்கு திட்டமிடப்பட்ட இயக்கம். அவர்களிடம் ஆயிரக் கணக்கான வீரர்கள் இருக்கின்றார்கள்.''* - என்று குறிப்பிட்ட இராணுவத் தளபதி *''நான் யுத்தத்தை இன்ன கால அவகாசத்துக்குள் - கால எல்லைக்குள் - நடத்தி முடிக்க வேண்டும் என்ற வரையறைக்குள் செயற்படவில்லை''* - என்றும் சொன்னார்.

அது மட்டுமல்ல. *''இந்தத் தடவை நாம் கிளிநொச்சியைக் கைப்பற்றினால் அதனை (முன்னரைப்போல) சிறிது காலத்தில் மீள விட்டுவிடமாட்டோம். ஆனாலும் எமது தாக்குதல் நடவடிக்கைகளுக்குக் காலம் பிடிக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும்.''* - என்றும் கூறிய அவர் அதற்கு மேலும் ஒரு விடயத்தைச் சொன்னார்.

அதாவது. இன்னும் ஐயாயிரம் புலிகள் - போரிடும் ஆற்றல் உள்ள வீரர்கள் - புலிகள் அமைப்பில் இருக்கின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

இப்படி 'இதோ புலிகளை அழித்து விடுகிறோம்', 'அதோ புலிகள் அழிந்தனர்' என்றெல்லாம் மார்தட்டி அறிவித்து வந்த அரசுப் படைத் தரப்பு, தாமே தமது நாட்டு மக்களுக்கு இதுவரை கொடுத்த கயிற்றிலிருந்து இப்போது பின்வாங்குகின்றது என்பதை அந்த ஆங்கில வார இதழ் எடுத்துரைத்துச் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

தாம் தினசரி கொன்றொழிக்கும் புலிகளின் எண்ணிக்கை தொடர்பான படைத்தரப்பின் அறிக்கை, எஞ்சியிருக்கும் புலிகளின் எண்ணிக்கை தொடர்பான - ஒன்றுக்கொன்று முரணான - அறிவிப்புகள், இராணுவ நடவடிக்கைகளுக்கும் புலிகளை முற்றாக அழித்தொழிப்பதற்கும் உறுதி அளித்து, அதனடிப்படையில் நாட்டு மக்களுக்குப் படைத்தரப்பு வழங்கும் கால அவகாசங்கள், பின்னர் அவற்றை அவ்வப்போது நீடிப்பது பற்றிய பிரகடனங்கள் போன்றவற்றை நோக்கும்போது ஒன்று தெளிவாகப் புரிகின்றது.

இந்த அறிவிப்புகளை நம்பி அவற்றுக்கு எடுபடும் 'மாதன முத்தா' வகையறாவைச் சேர்ந்தவர்களாகத் தென்னிலங்கையர் இருக்கும்வரை படை உயர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு உயர் வட்டாரங்களின் 'பருப்பு' ரக அறிவிப்புகள் இங்கு நன்கு அவியும் - வேகும் - என்பதே அது!

---

சகல ப.நோ.கூ. சங்கக் கிளைகளிலும்

# சித்திரைப் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு தட்டுப்பாடு இன்றி பொருள்களை விநியோகிக்குக

### கூ.அ. உதவி ஆணையாளர் அலுவலகம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.7

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுச் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அத்தியாவசியப் பொருள்களை எதுவித தட்டுப்பாடும் இன்றி நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் கேட்டுள்ளது.

அரிசி , சீனி, கோதுமை மா, பால் மா வகைகள் மற்றும் உப உணவுப் பொருள்களை சங்கங்கள் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் நூகர்வோர் சங்கக் கிளைகளை நாடும் போது கிளைகளில் பொருள்களை காட்சிப்படுத்தி விற்பனையை மேற்கொள்ள சகல சங்கங்களும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-224)

## புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

நல்லூர்,ஏப்.7

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் பரிசில்கள் பெற்ற மாணவர்களின் புகைப்படங்கள் தற்சமயம் கிடைத்துள்ளன. உரியவர்கள் சமய விவகாரக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தமக்குரிய புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு மாநகராட்சி மன்றச் செயலாளரும் சமய விவகாரக் குழுவின் செயலாளருமாகிய இ.இரத்தினசிங்கம் கேட்டுள்ளார். (203-111)

## விளையாட்டு மைதானத் திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.7

அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத் திறப்புவிழா இன்று பிற்பகல் 12.05 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய உபதலைவர் க.கிங்ஸ்லி கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சனசமூக நிலையத் தலைவர் ம.வித்தியானந்தநேசன் கலந்துகொள்வார். (202)

## 2006 ஒகஸ்ட் மாதத்திற்குப் பின் வன்செயல்களால் உயிரிழந்தவர்களுக்கு மரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஏப்.7

கடந்த 2006-08-11ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்.மாவட்டத்தில் வன்செயல்களால் மரணமடைந்தவர்களுக்கு மரணக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் குறித்த காலப்பகுதிக்குப் பின்னர் வன்செயல்களால் இறந்தவர்களின் பின்னுரித்தாளர்களை பின்வரும் சான்றிதழ்களுடன் நாளை பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார்.

இறந்தவரின் மரணச்சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, இறப்பினை உறுதிப்படுத்தும் பிரதேச செயலர், கிராம அலுவலகர் ஆகியோரின் சான்றிதழ் ஆகியவற்றை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் சமர்ப்பித்து உரிய உறுதிச் சீட்டில் கையொப்பமிடுமாறும் அறிவித்துள்ளார்.

இதேவேளை இக்காலப்பகுதியில் வன் செயல்களால் காயமடைந்தவர்களையும் அன்றைய தினம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறும் கேட்டுள்ளது. (202-207)

# சிறந்த பெறுபேற்றைப் பெற உதவியவர்கள் தமது ஆசிரியர்களும் பெற்றோர்களுமே என்கிறார் ரமேஸ்

### பொறியியலாளராக வர விரும்பும் யாழ்ற்ரன் மாணவன்



எனக்கு கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் தந்த உற்சாகமும் ஊக்கமுமே சிறந்த பெறுபேறு அடைவதற்கு உந்துசக்தியாக அமைந்தன என்கிறார் ஜி.சீ.ஈ.(சாதாரண தரப்) பரீட்சையில் தீவக வலயத்தில் முதலிடம் பெற்ற மாணவன் சிவசோதி ரமேஸ்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் கல்வி கற்று 9 பாடங்களிலும் ஏ தரத்திலும் ஒரு படத்தில் சி தரத்திலும் சித்தியடைந்த காரைநகர் புதுவீதியில் வதியும் சிவசோதி றமேஸ் உதயனுக்கு வழங்கிய பேட்டியில் மேலும் கூறியதாவது-

எனது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரின் ஒத்துழைப்பினாலேயே நான் சிறந்த பெறுபேற்றைப் பெறமுடிந்தது. ஐந்தாம் தர புலமைப்பரிசில பரீட்சையில் சித்தியடைந்ததையடுத்து கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றேன். காரைநகரில் மீளக் குடியமர்ந்த பின் யாழ்ற்ரன் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன்.

கல்வி கற்பதற்கு காரைநகரில் நிறைவான வளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக எமது பாடசாலையில் கற்பிக்கப்படும் அனைத்துப் பாடங் களையும் அன் றைய தினமே மீட்டல் மூலம் கற்று வந்தால் எந்த மாணவனும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வளவுக்கு இலகுவாக எமது பாட சாலை ஆசிரியர்கள் மாணவர்களின் நிலைமை அறிந்து போதித்து வருகின்றனர். அத்துடன் பாடசாலையில் நடை பெற்ற பயிற்சிப் பரீட்சைகள் மூலமும் பரீட்சைக்குத் தயாராக முடிந்தது.

மேலும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் கல்வியை விரும்பிக் கல்வி கற்றேன். எனது அக்கா நான் கல்வி கற்பதற்காக பல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். அவரும் என்னைப் போன்ற பெறுபேறு பெற்றவர். நான் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை விரும்பிக் கற்றேன். எதிர்காலத்தில் சிறந்ததொரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதே எனது விருப்பம்.

தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை தேடி வாசிப்பதே எனது பொழுது போக்கு. அதிகாலை வேளையிலேயே அதிகம் கற்பது எனது வழக்கம். காலை வேளைகளிலேயே கற்கும் பாடங்கள் மனதில் பதியக்கூடியதாக இருக்கும். - என்றார்.

(ப-250)

## மட்டுவில் கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் பூசை

யாழ்ப்பாணம்,ஏப்.7

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் நான்காம் நாள் திருவிழா இன்று காலை தொடக்கம் பிற்பகல் வரை இடம்பெறவுள்ளது.

உற்சவத்தையொட்டி ஆலய சூழலில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இன்று பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடுவார்கள் என்பதால் பொது மக்கள் தமது உடைமைகளை பாதுகாத்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலயசூழலில் குடிதண்ணீர், சுகாதாரம் போன்ற வசதிகள் மேற்செய்யப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையும், சிற்றூர்திச் சங்கமும் போக்குவரத்துச் சேவைக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (203-131)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 26 | 08.04.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: திருதியை பி.இ. 03.13வரை | |
| நட்சத்திரம் : | பரணி |
| | மு.இ.07.08வரை |
| சுபநேரம் : | 10.37 - 12.07 |
| ராகுகாலம் : | 03.07 - 04.37 |

# ஆதரவற்ற தாயின் உணர்வுகளுக்கு வடிகாலாக படங்களும் கவிதைகளும்



யாழ்ப்பாணம்,ஏப்.7

பிள்ளைகளாலும், உறவுகளாலும் கைவிடப்பட்ட பெற்றோரின் உள்ளத்து உணர்வுகள் பெரும் வேதனைக்குரியன. தங்கள் இன்ப, துன்பங்களைப் பகிர வடிகால்கள் இன்றி தமக்குள்ளேயே பூட்டி வைத்து தவிப்பது தான் இவ்வாறான பெற்றோரின் நிலையாகிவிட்டது.

கைதடி முதியோர் இல்லத்தில் வாழம் ஒரு தாய் தனது உள்ளக் கிடக்கையின் வடிகாலாக கவிதை எழுதுவதையும், படங்கள் வரைவதையும் பயன்படுத்தி வருகின்றார்.

பொன்னம்பலம் சிவக்கொழுந்து (வயது 61) என்னும் தாய் பாடசாலையில் 4 ஆம் தரம் மட்டுமே கல்வி கற்றுள்ளார். இவருக்கும் ஒரு பிள்ளை மட்டுமே. அவரும் வெளிநாட்டில் வசிப்பதால் ஆதரவின்றி கைதடி முதியோர் இல்லத்தில் சேர்ந்து அங்கு வாழ்ந்து வருகின்றார்.

தனது முன்னைய வாழ்க்கை வட்டத்தையும் உறவுகளையும் மறக்க முடியாமலும் யாருடனும் அதனைப் பகிர்ந்து கொள்ள முடியாமலும் வாழும் இவர் -

பல கொப்பிகளில் தமது உணர்வுகளுக்கு வடிகாலாக கவிதைகளை எழுதி வைத்துள்ளார்.

உறவுகள் அவலம், விரக்தி, அரசியல் எனப் பல கவிதைகளும் அதில் அடங்கியுள்ளன.

அவருடைய கவிதைகளில் ஒரு பகுதியில்!

பறவைகளே! பறவைகளே!
எங்கே போறீங்க
பழுத்த பழம் இங்கிருக்கு
புசித்துப் பாருங்க
பசி தீர்த்து களைப்பாறி
எம்மை விட்டு
உயரப் பறந்து செல்லாதீர்
என்று தொடர்கின்றது



உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கும் படம்

இதேபோன்று இவர் வரைந்த படங்களும் கூட மிகவும் பலவிதமான உணர்வுகளை பிரதிபலித்து நிற்கின்றன. பேனாவை மட்டும் பயன்படுத்தி இவர் படங்களை வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழவைத்த மாநிலத்துக்கு விசுவாசம் ரஜினிகாந்துக்கு சிவசேனா பாராட்டு

மும்பை, ஏப்.07

ஒகேனக்கல் பிரச்சினையில் தமிழகத்துக்கு ஆதரவான நிலையை எடுத்துள்ள நடிகர் ரஜினிகாந்துக்கு சிவசேனா கட்சி புகழாராம் சூட்டியுள்ளது.

இதுகுறித்து சிவசேனா கட்சியின் 'சாம்னா' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

'மும்பை நகரால் வாழ்வு பெற்ற அமிதாப்பச்சான் போன்ற நடிகர்கள், மராத்தி மற்றும் வட்டார விடயங்களில் நியாயமான முடிவை எடுப்பதில்லை. ஆனால் நடிகர் ரஜினிகாந்த் இதில் முற்றிலும் மாறுபட்டவர். அவர் உண்மையிலேயே மகாராஷ்டிர கலாசாரத்தை உடையவர். அதனால்தான் தனக்கு வாழ்வும் புகழும் அளித்த தமிழகத்திற்கு அவர் விசுவாசமாக உள்ளார். மகாராஷ்டிரத்தில், பிறந்து,கர்நாடகத்தில் வாழ்ந்து, தமிழகத்தில் சுப்பர் ஸ்ரார் அந்தஸ்துப் பெற்ற அவர், ஒகேனக்கல் பிரச்சினையில் தமிழகத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை பாராட்டுக்குரியது.

ஆனால், மும்பையில் வாழும் நடிகர்களில் எத்தனை பேர் மகாராஷ்டிர பிரச்சினைக்காக போராடுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்'' - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழக மக்கள் எடுத்த கத்தியை கீழே போடச் சொல்வது ஆபத்து

## விஜயகாந்த் ஆவேசம்

சென்னை, ஏப்.07

கன்னடர்களின் வெறியாட்டம் என்ற கட்டியை அகற்ற, எழுச்சி என்ற கத்தியை தமிழக மக்கள் எடுத்துள்ளனர். அதை கீழே போடச் சொல்வது ஆபத்தானது என்று தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஒகேனக்கல் திட்டப் பிரச்சினையில் புதிய ஆட்சி வரும் வரை அமைதி காப்போம் என்று கருணாநிதி கூறியுள்ளார். தமிழ்நாட்டில் பல கட்சி கள் களம் இறங்கியும், திரையுலகம் உண்ணா விரதம் நடத்தியும் பல் வேறு தமிழ் அமைப்பு கள் போராட்டம் நடத்தி யும், தமிழ் மக்களின் நியாய உணர்வுக்கு வடிவம் கொடுத்துள்ளன.



இப்போது, போராட்டங்களைக் கைவிடுங் கள் என்றால் என்ன பொருள்? முதல்வர் முடிவெடுக்கும் முன், தமிழக மக்களின் உணர்வை மதித்திருக்க வேண்டாமா? சர் வக் கட்சித் தலைவர்கள், உண்ணாவிரதம் இருந்த கலைத் துறையினர், சட் டத்தரணிகள் போன்றோரிடம் கலந்து பேசியிருக்க வேண்டாமா? மத்திய அர சால் அவருக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியா? தமிழ் நாட்டில் உள்ள தனது கூட்டணியைத் தக்க வைத்துக் கொள்கிற தந்திரமா?

இந்திய ஒற்றுமை என்ற உடம்பில், கன்னடர்களின் வெறியாட்டம் என்ற அநீதி, கட்டியாக உள்ளது. நீதியை நிலை நிறுத்த,அறுவைச் சிகிச்சைக்காக தமிழ் நாட்டு மக்கள் 'எழுச்சி' என்ற கத்தியை எடுத்துள்ளனர். கருணாநிதி, கத்தியை கீழே போடச் சொல்வது நோயாளிக்கும் ஆபத்து, நோயும் தீராது. எனவே, இப்பிரச்சினைக்காக தே.தி.மு.க. எதிர்வரும் 10ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தும். -என்றுள்ளது

# ரஜினிகாந்தின் உருவப் பொம்மை கர்நாடகத்தில் எரிப்பு; எதிர்ப்புத் தெவித்து மாநிலம் முழுவதும் போராட்டம்

பெங்களூர், ஏப்.07



'கர்நாடகத்தில் இனி ரஜினிகாந்தின் திரைப்படத்தை ஒருபோதும் திரையிட அனுமதிக்க மாட்டோம். ரஜினிகாந்தை பெங்களூர் உட்பட கர்நாடகத்தின் எந்த வொரு மூலைக்குள்ளும் நுழையவும் விட மாட்டோம்.

- இவ்வாறு கன்னட அமைப்புகள் சூளுரைத்திருக்கின்றன.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்திற்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட கன்னட அமைப்புகளுக்கு எதிராக தமிழ் திரையுலகத்தின் உண்ணாவிரத போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவரான ரஜினிகாந்த் ஆவேசமாகப் பேசினார். அதில் கண்டித்திருந்தார்

ரஜினிகாந்தின் பேச்சுக்கு கன்னட அமைப்புகள் எதிர் ப்புத் தெரிவித்துள்ளன.

பெங்களூரில் கர்நாடக ரக்ஷண வேதிகே அமைப்பின் சார்பில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் ரஜினிகாந்துக்கு எதிராகக் கோஷம் எழுப்பினார்கள். அப்போது அவரின் உருவப் பொம்மையை தீ வைத்து எரித்தனர்.இதேபோல பெங்களூர் சிக்கபிதரகல்லு என்ற இடத்தில் ரஜினிகாந்த் பேச்சுக்கு எதிராக வீதி மறியல் செய்தனர். மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலும் ரஜினிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடந்தது.

இந்த நிலையில் கன்னட சலுவளி கட்சி சார்பில், அதன் தலைவர் வாட்டாள் நாகராஜ் தலைமையில் பெங்களூரில் ஊர்வலம் நடந்தது. அங்கு ரஜினிகாந்தின் உருவப் பொம்மையை தீவைத்து எரித்தார்கள். பின்னர் வாட்டாள் நாகராஜ் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

ரஜினிகாந்துக்கு தமிழகம் பெயரையும், புகழையும் வாங்கி கொடுத்து விட்டது என்பதற்காக தமிழ் பித்துப்பிடித்து அலைகிறார். இதனால்தான் உண்ணாவிரத போராட்டத்தில் கன்னடர்களை உதைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். கன்னடர்களை உதைக்க வேண்டும் என்று சொல்ல இவர் யார்?

கர்நாடகத்தில் இனி ரஜினிகாந்தின் திரைப்படத்தை ஒருபோதும் திரையிட அனுமதிக்கமாட்டோம். ரஜினிகாந்தை பெங்களூர் உட்பட கர்நாடகத்தின் எந்த ஒரு மூலைக்குள்ளும் நுழைய விடமாட்டோம். - இவ்வாறு வாட்டாள் நாகராஜ் கூறினார்.

# மருமாதா சொரூபத்தை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்தார் புலிகளின் ஊடகப் பேச்சாளர் இராசையா இளந்திரயன் ஆஸ்திரேலிய வானொலியொன்றுக்கான செவ்வியில்.

மன்னார் பெருநிலத்தை தம் வசமாக்கி மன்னார் - பூநகரி வழியாக ஒரு பாதையைத் திறப்பது இராணுவத்தினருக்கு அவசியமாக விருக்கலாம் ஆனால் ஒரு வருடமாக நடைபெறும் இந்தச் சண்டையினால் ராணுவத்துக்கு ஏற்படப்போகும் இழப்புக்கள் எந்தளவாக இருக்கப் போகின்றது? நாம் தீவிரமாகப் போராடுவோம் என்று அவர் கூறியுள்ளார்.

இது பற்றி ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில் இளந்திரையனின் கருத்து, வெற்றுப்பேச்சு, இப்பகுதியில் காலக்கெடு என்றும் நாங்கள் விதிக்கவில்லை, நியாயமான பகுதிகளை நாங்கள் கைப்பற்றியுள்ளோம். புலிகளுக்கு பெருமளவில் இழப்புக்களை ஏற்படுத்தி கணிசமான அளவு ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளோம் என்றார் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி.

### ராணுவத்தின் மனோ நிலை

''ராணுவத்தின் மனோநிலை மிக நன்றாகவிருக்கிறது அவர்கள் பணியை விரைவில் செய்து முடிப்பார்கள்'' என்றுகூறிய அவர் மடு பிரதேசம் அடுத்த வாரம் புது வருட தினத்துக்கு முன் தம் வசமாகுமா என்பது பற்றி எதுவும் கூற மறுத்துவிட்டார். எமது படையினர் சண்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு போட்டியில் அல்ல'' என்றார். அவர்களின் திட்டங் களை மழை பாதித்துள்ளது. பதுங்குகுழிகள் நீரில் மூழ்கியுள்ளன. எதிரே உள்ள பகுதி சேறும் சகதியுமாக உள்ளது. ராணுவம் தம் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டு கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகிறார் கள் என்றார்.

போர் விரிவடையும் என்ற அச்சத்தில் புனித மடுமாதா சொரூபம் வேறு இடத்திற்கு குருமார்களால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மூடு காவில் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தேவன்பிட்டி மாதாகோயிலில் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளது.

### ராணுவத் தளபதி கூறிய கருத்து

கடந்த வெள்ளிக்கிழமை கள நிலைகளை ஆய்வதற்காக ராணுவத் தளபதி லெப். ஜெரல் சரத் பொன்சேகா மன்னாருக்கு விஜயம் செய்திருந்தார். பின்னர் அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் - மடுமாதா கோயிலிலுள்ள குருமார்கள் புலிகளின் அழுத்தத்துக்குள்ளாகி இருப்பதால் மாதா சொரூபத்தை அகற்றும் விடயத்தில் அவர்களுக்குச் சார்பாகவே நடந்து கொண்டுள்ளார்கள் என்று கூறியிருந்தார். மேலும் அப்பிரதேசத்தின் கட்டுப்பாட்டை புலிகள் இழந்துள்ளார்கள் என்பதற்கு இது எடுத்துக் காட்டாகும் என்றும் கூறியிருந்தார்.

ஜெனரல் பொன்சேகாவின் இந்தக் கருத்தை மன்னார் ஆயர் அதி.வண ராயப்பு ஜோசப் கடுமையாக ஆட்சேபித்திருந்தார்.

நாங்கள் புலிகளின் அழுத்தத்திற்குள்ளாகவில்லை எவரது அழுத்தத்திற்கும் நாங்கள் உள்ளாவதில்லை. புலிகளின் அல்லது ராணுவத்தின் அழுத்தங்களுக்கு நாங்கள் உள்ளாவதில்லை. தீர்மானங்களை நாங்களே எடுக்கின்றோம். தீர்மானம் எடுப்பதற்கு முன் இருதரப்பு கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம் என்பதே சரியாகும் என்று கூறினார்.

புனித மடுமாதா சொரூபத்தை அகற்றுவதற்கு முன் கள நிலைமைகளை கவனமாக ஆராய்ந்தோம். நான்தான் அவ்வாறு செய்வதற்கான பணிப்புரையை விடுத்தேன்-என்று அதிவண. ராயப்பு கூறினார்.

### புலிகளின் பகுதிக்கு எடுத்துச் சென்ற காரணம்

ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஒரு தேவாலயத்திற்கு மடுமாதா சொரூபத்தைக் கொண்டு வராமல் புலிகளின் பகுதிக்கு கொண்டு போனமைக்கு என்ன காரணம் என்று பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அதிவண.ராயப்பு ஜோசப் பதிலளிக்கையில் கூறியதாவது:

களநிலைகளைப் பற்றி ஆராய்ந்ததன் பின்னர் இந்த முடிவை நாங்கள் எடுத்தோம். எவரும் எம்மை நிர்ப்பந்திக்கவில்லை. மடுமாதா தேவாலயம் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலேயே உள்ளது. அதாவது அங்கேயே புனித அன்னையின் சொரூபமும் உள்ளது. தெற்கிலுள்ள மக்கள் இதை மறந்துவிட்டார்கள். நாங்கள் நினைத்தபடி நடமாடமுடியாது. தெற்கிற்கு நாங்கள் போவதென்றால் முதலில் கிளிநொச்சிக்குப் போகவேண்டும் புனித சொரூ பத்தை பத்திரமாக வைத்திருப்பதே எமது முதல் முக்கியத்துவமான விடயம். நாங்கள் புலிகளிடமும் ராணுவத்திடமும் கேட்டுக் கொள்வதென்னவென்றால் மடுமாதா கோயில் பகுதியிலிருந்து வெளியேறி விடுங்கள் என்பதே-என்றார்.

மடுமாதா கோயில் பகுதியுடனான தொடர்புகள்யாவும் முற்றாக அறுந்து போயுள்ளன. அங்கே என்ன நடக்கிறது என்பதே எனக்குத் தெரியாது. எந்தத் தகவலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

தெற்கிலுள்ள மக்கள் தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்தக்கூடாது. அல்லது எங்களைப்பற்றி தவறான தீர்மானம் எடுக்கலாகாது. நாங்கள் நாட்டை நேசிக்கின்றோம். அமைத்திக்காக பாடுபடும் எவரோடும் நாம் ஒத்துழைப்போம். என்னுடன் எப்பொழுதும் தொடர்பு கொள்ளலாம். தவறான பரப்புரைகளுக்கு எவரும் சிக்கிவிடலாகாது.

மன்னார் களமுனையில் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களே பெரும்பாலும் இடம் பெற்று வந்துள்ளது. முன்னேறும் படையினர் மிதிவெடிகளையும் ஏனைய வெடிபொருள்களையும் அகற்றிக் கொண்டு செல்லவேண்டியிருக்கின்றது. கொல்லப்பட்ட புலிகளில் பெரும்பாலானவர்கள் பெண்களாகவும் இளம் போராளிக ளாகவும் இருந்துள்ளனர். மன்னார் வெலி ஓயா கள நிலைகளில் ஏற்படக்கூடிய பலத்த மோதல்களின் போது பயன்படுத்துவதற்காக தமது உறுதி மிக்க சக்திகளை புலிகள் சேமித்து வைத்திருக்கிறார்கள் என்று புலனாய்வு துறையினர் கருதுகின்றனர். இந்த விடயம் படையினருக்கும் நன்கு தெரியும் என்கிறார்கள் அவர்கள். (ப)

# கை, கால்கள் குறுகிய ஈராக் சிறுமிக்கு நவீன சிகிச்சை மூலம் எலும்பு வளர்ச்சி

## சென்னை டாக்டர்கள் சாதனை

சென்னை,ஏப்.07



எலும்பு வளர்ச்சி இல்லாத ஈராக் சிறு மிக்கு, வளர்ச்சிக்கான நவீன அறுவைச் சிகிச்சை செய்து சென்னை டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர். சத்திரசிகிச்சையின் பின்னர் சிறுமியின் கை,கால்கள் ஆறு மாதத்தில் 12 சென்ரிமீற்றர் வரை வளர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் நாட்டின் மொசூல் நகரில் வசிப்பவர் அகமது, இவருடைய மனைவி ஷீமா. இவர்களுக்கு 3 குழந்தைகள். 2 ஆவது மகள் நபா (வயது - 5).இந்தக் குழந்தைக்கு எலும்பு வளர்ச்சி இல்லாமல், கை,கால்கள் குறுகியவையாக இருந்தன. மற்றைய எல்லா உறுப்புகளும் வளர்ச்சி அடைந்துள்ளன. 'எகாண்ட்ரோ ப்ளேசியா' என்ற இந் நோய்க்கு ஈராக்கில் சிகிச்சை அளிக்க வசதி இல்லை. இதனால், நபாவை சென்னை அண்ணா நகர் சவுந்தரபாண்டியன் எலும்பு, மூட்டு வைத்தியசாலைக்கு அவளது பெற்றோர் அழைத்து வந்தனர். அங்கு நபா வுக்கு,கடந்த ஒக்டோபர் மாதம், 'லிம்ப் லென்தனிங்' என்ற நவீன அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

டாக்டர்கள் சிவமுருகன், ரவி சுப்பிர மணியம், பேராசிரியர் சவுந்தரபாண்டியன் ஆகியோர் நபாவுக்கு அறுவை சிகிச்சை செய்தனர். சிகிச்சைக்குப் பின் நபாவின் எலும்பு வளர்ச்சி அடைந்து வருகிறது. இது பற்றி, டாக்டர் சிவமுருகன் நேற்றுமுன் தினம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

ஒரு குழந்தை 5 வயதில்,120 சென்ரி மீற்றர் உயரம் இருக்கவேண்டும். ஆனால் நபா, 84 சென்ரிமீற்றர் மட்டுமே இருந்தாள். இவளுக்கு லிம்ப் 'லென்தனிங்' அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இதில் கை, கால்களில் மூட்டுக்கு மேலே யும் கீழேயும் உள்ள எலும்புகளை வெட்டி, இடைவெளிவிட்டு அவற்றை இணைத்தோம். இந்த சிகிச்சையால், 6 மாதங்களில் நபா 12 சென்ரிமீற்றர் வளர்ச்சி அடைந்திருக்கிறாள்.

சில ஆண்டுகளில் மற்றைய குழந்தைகளைப் போல நபா வளர்வாள். இந்த அறுவைச் சிகிச்சைக்கு வெளிநாட்டில் 25 லட்ச ரூபா (இந்திய ரூபா) செலவாகும். எங்கள் வைத்தியசாலையில் 4 லட்சம் ரூபா செலவானது. சிறுமியின் குடும்ப வறுமை காரணமாக குறைந்த கட்டணமே நிர்ணயிக்கப்பட்டது. - இவ்வாறு டாக்டர் சிவமுருகன் கூறினார்.


## விற்பனைக்கு

பல்கலைக்கழக விரிவுரையாளரின் தனிப் பாவனையில் மிகவும் நல்ல நிலையிலுள்ள LML Select ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு:

*190, அரசடி வீதி, கந்தர்மடம்.*

T.P: 0779177899, 0212227697



## TENDER NOTICE

St.John Ambulance, Jaffna, No: 161, 1st Cross Street, Jaffna

**Sealed tender for construction of training centre**

Tender documents could be obtained from the above address and accepted in sealed cover in the same address between 09.00am - 02.00pm before 13th April 2008. Any further clarification on this matter could be obtained from Telephone No: 021 222 3166, 222 5599 or 060 2214444.

S.Selvaranjan O.St.J.
District Commissioner

St.John Ambulance
Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட்

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு இலக்கு 253 ஓட்டங்[கள்]


சதம் அடித்த சமரவீர

போர்ட் ஒவ் ஸ்பெயின், ஏப்ரல் 07

இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றி இலக்காக 253 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெற்றியிலக்கை நோக்கி நேற்றிரவு மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பெடுத்தாடவிருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. தொடரில் முதல் போட்டியில் இலங்கை அணி 121 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்தது. கடைசி மற்றும் இரண்டாவது டெஸ்ட் போட்டி போர்ட் ஒவ் ஸ்பெயினில் நடைபெற்றுவருகின்றது.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 278 ஓட்டங்களையும், மேற்கிந்தியத் தீவுகள் அணி 294 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் 16 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இலங்கை அணி இரண்டாம் இன்னிங்ஸை ஆடியது. ஆரம்பத்திலேயே ரெய்லரின் வேகம் மிரட்ட வர்ணபுர ஓட்டமெதுவும் எடுக்காமல் பவிலியன் த[ிரும்பி]னார். தொடர்ந்து வன்டோட் ஒரு ஓ[ட்டத்]துடன் பரிதாபகரமாக 'ரன் அவுட்' ஆ[னார்].

தொடர்ந்துவந்த அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 12 ஓட்டங்களுடனும், குமார் சங்ககார 14 ஓட்டங்களுடனும் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர். தொடர்ந்து சமரவீர சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். மறுமுனையில் வந்த டில்சான் 25 ஓட்டங்களுடனும், சமர சில்வா 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இந்நிலையில் 7ஆவது விக்கெட்டில் இணைந்த சமிந்த வாஸ் - திலான் சமரவீர ஜோடி சிறப்பாக ஆடி அணியைத் தூக்கி நிறுத்தியது. அபாரமாக ஆடிய சமரவீர டெஸ்ட் அரங்கில் தனது 6ஆவது சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். இந்த ஜோடி தம்மிடையே 138 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்திருந்த நிலையில் சமிந்த வாஸ் 45 ஓட்டங்களுடன் கெய்லின் சுழலில் வெளியேறினார்.

தொடர்ந்துவந்த துஸரா மிராண்டோ 10 ஓட்டங்களுடனும், முரளி 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சமரவீர 125 ஓட்டங்களுடன் (199 பந்துகள், 18 பவுண்டரிகள்) 9ஆவது விக்கெட்டாக 'ரன் அவுட்' ஆனார்.

இறுதியில் இலங்கை அணி இரண்டாம் இன்னிங்ஸில் 268 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் ஜெரோமி ரெய்லர் 4 விக்கெட்டுகளையும், டரன் பவல், பிடல் எட்வாட்ஸ், டவயினி பிராவோ மற்றும் கிறிஸ் கெய்ல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இலங்கை அணியின் இரண்டாம் இன்னிங்ஸ் நிறைவுடன் நேற்றுமுன்தின மூன்றாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. நேற்று இரவு நடைபெறவிருந்த நான்காம் நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 253 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடவிருந்தது.

# சொந்த மண்ணில் இந்தியாவுக்கு மரணஅடி தென்னாபிரிக்காவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

அஹமதாபாத், ஏப்ரல் 07

சொந்த மண்ணில் இந்திய அணிக்கு அவமானம். அஹமதாபாத்தில் இடம்பெற்றுவந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் மீண்டும் சொதப்ப, தென்னாபிரிக்காவிடம் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி படுதோல்வியைச் சந்தித்தது. பந்து வீச்சு துடுப்பாட்டம் என இரண்டிலும் கலக்கிய தென்னாபிரிக்க அணி மூன்றே நாளில் சாதித்துக் காட்டியது.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க வேகத்தில் திணறிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 76 ஓட்டங்களுக்குள் சுருண்டது. தென்னாபிரிக்கா இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 494 ஓட்டங்களை எடுத்திருந்து, 418 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. டீ வில்லியர்ஸ் 217 ஓட்டங்களுடனும், போல் ஹரீஸ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. [illegible] னத்தில் லேசான ஈரப்பதம் காணப்பட்டது. [illegible] து பந்துவீச்சுக்கு கைகொடுக்கும் என்பதை உணர்ந்த அணித்தலைவர் சிமித் [illegible] துடுப்பெடுத்தாட விரும்ப[வி]ல்லை. ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே 494 ஓட்டங்களுடன் ஆட்டத்தை 'டிக்ளேயர்' செய்தார்.

இதையடுத்து 418 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஸ்ரைன் வீசிய முதல் ஓவரில் இரண்டு இமாலய சிக்ஸர்களை அடித்து ஷேவாக் அசத்தினார். தொடர்ந்து விளாச நினைத்த இவர் நிற்னி வீசிய பந்தை தேவையில்லாமல் அடித்து ஆட முனைந்து 17 ஓட்டங்களுடன் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அடுத்து டிராவிட் வந்தார். முதல் இன்னிங்ஸில் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்த இவர், மீண்டுமொரு முறை பொறுப்பை உணர்ந்து விளையாட தவறி 17 ஓட்டங்களுடன் மோர்கீலின் பந்தில் மூன்றாவது சிலிப்பில் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்த ஓவரில் வசீம் ஜாபரும்(19) நடையைக் கட்ட, இந்திய அணி தோல்வியிருந்து தப்புமா என்ற சந்தேகம் எழுந்தது.

ஐந்தாவது வீரராக வந்த கங்குலி, லக்ஸ்மனுடன் ஜோடி சேர்ந்தார். தென்னாபிரிக்கப் பந்துவீச்சை ஓரளவு சமாளித்த லக்ஸ்மன், 45 பந்துகளில் 35 ரன்கள் எடுத்த நிலையில் மோர்கீலின் பந்தில் பௌச்சரால் பிடியெடுக்கப்பட்டார்.

அடுத்து வந்த துணை அணித்தலைவர் டோனி, கங்குலியுடன் ஜோடி சேர்ந்தார். அபாரமாக விளையாடிய இந்த ஜோடி அணியைச் சரிவிலிருந்து மீட்க முயன்றது. கலிஸ் பந்தை 'கவர்' திசைக்கு விரட்டி, கங்குலி டெஸ்ட் அரங்கில் 33ஆவது அரைச் சதம் கடந்தார். இந்நிலையில் மீண்டும் பந்துவீச வந்த ஸ்ரைன் இந்தியாவின் நம்பிக்கையை தகர்த்தெறிந்தார். இவர் கலக்கலாக விளையாடி கொண்டிருந்த கங்குலியை [illegible]. கங்குலி 8 பவுண்டரிகள் [illegible] ங்களை எடுத்தார்.

[illegible] வந்த வேகத்தில் ஹரீஸின் பந்தில் சிக்ஸர் அடித்து அசத்தினார். சிறப்பாக விளையாடிய டோனி டெஸ்ட் போட்டிகளில் 9ஆவது அரைச்சதத்தைப் பதிவு செய்தார். களத்திலிருந்த கடைசித் துடுப்பாட்ட வீரரான இவரும் (52) நிற்னியின் வேகத்தில் வெளியேற, தென்னாபிரிக்காவின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. அணித்தலைவர் கும்ளே 5 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஹரீஸ் சுழலில் சிக்கினார்.

11ஆவது வீரராக வந்த சிறிசாந்த, ஸ்ரைனின் பந்தில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்தார். இவரது ஆட்டத்தை அடுத்து வந்த நிற்னி முடித்து வைத்தார். இவர் 17 ஓட்டங்கள் எடுத்தார். பதான் 43 ஓட்டங்களுடன் (ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 328 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் மற்றும் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன்மூலம் 8 ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த மண்ணில், இந்தியா இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்தது. தென்னாபிரிக்கா தொடரில் 1-0 என்ற முன்னிலையைப் பெற்றுள்ளது.

# 3வது டெஸ்ட்; சச்சின் நீக்கம்

மும்பை, ஏப்ரல் 07

காயம் முழுமையாக குணமடையாததால் கான்பூர் டெஸ்ட் போட்டியிலும் சச்சின் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியத் தொடரின் போது சச்சினுக்கு இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டது. சென்னை டெஸ்டில் இது அதிகமாக அஹமதாபாத் போட்டியிலிருந்து விலகுகின்றார் என சச்சின் அறிவித்தார். இவர் அடுத்து கான்பூரில் நடக்கவிருக்கும் மூன்றாவது டெஸ்டிலும் விளையாடமாட்டார் என இந்தியக் கிரிக்கெட் சபையின் செயலர் நிரஞ்சன் ஷா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

''சச்சின் நன்றாக குணமடைந்து வருகிறார். அவர் காயத்திலிருந்து முழுமையாக விடுபட இன்னும் சில நாட்கள் ஆகும். இதனால் 11ஆம் திகதி தொடங்கும் கான்பூர் போட்டியில் அவர் பங்கேற்க மாட்டார்.'' - என்றார்.

# அடுத்த உலகக் கிண்ணத்திலும் விளையாடுவேன் - சச்சின்

புதுடில்லி, ஏப்ரல் 07

2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியிலும் தான் விளையாடுவார் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார். அந்தப் பேட்டியில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

உலகக் கிண்ணத்தை வெல்லவேண்டும் என்பது எனது நிறைவேறாத கனவாக இருக்கின்றது. எனவே அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் நிச்சயம் விளையாடுவேன். இப்போதைக்கு கிரிக்கெட் விளையாடுவதை மிகவும் நேசிக்கின்றேன். எதிர்காலம் பற்றி அதிகம் யோசிப்பதில்லை.

கிரிக்கெட் வீரர்கள் ஏலம் விடப்பட்டுள்ளமையால் கிரிக்கெட் விளையாட்டு பாதிக்கப்படாது. என்னைப் பொறுத்தவரை நான் ஒருபோதும் பணத்திற்காக் கிரிக்கெட் விளையாடியதில்லை. இந்திய அணியில் மூத்த வீரர்களுக்கும் இளம் வீரர்களுக்கும் இடையில் எந்தவித பிரச்சினையும் இல்லை. பத்திரிகைகள் தான் இப்படி தவறாகச் செய்திவெளியிடுகின்றன.

போட்டிகளில் எதிரணி வீரர்களைத் திட்டுவது சகஜமாக இருக்கலாம். ஆனால், கிரிக்கெட் [illegible] ல்லை என்று" - என்றார் சச்சின்.


## பாராட்டி வாழ்த்துகிறோம்



*நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிவசக்தி-திலகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி*

**செல்வி சுதர்சனா**

*(மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை )*

அவர்கள் கடந்த வருடம் நடைபெற்ற கா.பொ.த(சா.த பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி 10A பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல வாய்க்கால்தரைப் பிள்ளையார், காளி, பத்திரகாளி, மாதாவைப் பிரார்த்திக்கிறோம்.

**வாழ்த்துபவர்:** *அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அன்ரி, சுபாக்கா, ராசுக்குட்டி அண்ணை, சுகிர்தா.*


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு ★ 14 ★ 01 ★ 1945



உதிர்வு ★ 23 ★ 03 ★ 2008

**அமரர் கார்த்திகேசு மனோரஞ்சன்**

கடந்த 23.03.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியை இன்று (07.04.2008) திங்கட் கிழமையும், நாளை (08.04.2008) செவ்வாய்க்கிழமையும் இடம் பெறும். சபிண்டீகரண நிகழ்விலும் அன்றைய மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மரணச் சடங்கில் நேரடியாகவும் மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைபேசி மூலமாக இரங்கல் செய்தியும் ஆறுதலும் தெரிவித்த அனைத்து உறவிற்கும் மற்றும் நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி (சி/552209) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கைலாயபிள்ளை யோகம்மா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கைலாயபிள்ளை யோகம்மா காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-இராசம்மாவின் அன்புமகளும், சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், கைலாயபிள்ளையின் அன்பு மனைவியும், உருத்திரகுமார் (லண்டன்), விஜயகுமார் (லண்டன்), கோகிலராணி, சந்திரகுமார் (ஜேர்மனி), பத்மராணி, பிறேமராணி (நோர்வே), புஸ்பராணி (நோர்வே), அசோக்குமார் (நோர்வே), கலாராணி (லண்டன்), திலீப்குமார் (லண்டன்), சிறீகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சதானந்தன், திருஞானசுந்தரம், கோபாலசிங்கம், வரலட்சுமி, செல்லத்துரை, பொன்னுத்துரை, சரஸ்வதி, சண்முகலிங்கம், கமலாதேவி, பரமேஸ்வரி, சின்னத்துரை, காலஞ்சென்ற அன்லட்சுமி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற செல்வராசாவின் சகோதரியும் லீலாவதி, நவமணி, நகுலேஸ்வரன், அமராவதி, நாகேந்திரதாஸ், பாலேந்திரன், சுரேந்திரன், மீரா, பாஸ்கரன், மதிவதனி, நவமணி அகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/5, புகையிரத நிலைய வீதி,*
*புங்கன்குளம், அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்

### சிவஸ்ரீ பசுபதீஸ்வரக் குருக்கள் இராமலிங்கக் குருக்கள்

திருநெல்வேலி கிழக்கு, ஸ்ரீ பூதநாத சுவாமி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ பசுபதீஸ்வரக் குருக்கள் இராமலிங்கக் குருக்கள் நேற்று (06.04.2008) ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்துள்ளார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2008) திங்கட் கிழமை மு.ப. 11மணிக்கு இல 39, செங்குந்தா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்க்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருநெல்வேலி*
*கிழக்கு*

தகவல்:
மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாச்சி சோதனைச் சாவடி நேற்று திடீரென மூடப்பட்டது

அமைச்சர் ஜெயராஜ் மீதான குண்டுத் தாக்குதலையடுத்து மதவாச்சி சோதனைச் சாவடியை பொலிஸார் நேற்று திடீரென மூடினர்.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்து பல மணிநேரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், சில பயணிகள் தமது பயணத்தைத் தொடர முடியாது வவுனியாவுக்கே திரும்பிச் சென்றனர் என்றும், மதவாச்சி ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ரயில் தாமதாகவே புறப்பட்டது என்றும் செய்திகள் கூறுகின்றன.

பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியே மதவாச்சி சோதனைச் சாவடி தாக்குதலையடுத்து உடனடியாக மூடப்பட்டது என அரசு கூறுகின்றது.

கொழும்புக்கு அருகிலே இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்காக வடக்கில் இருக்கின்ற முக்கியமான சோதனைச் சாவடியை மூடியது தங்களுக்கு பலத்த சிரமங்களை ஏற்படுத்தியிருக்கிறது என வடக்குப் பகுதி பயணிகள் பலர் விசனம் தெரிவித்தனர்.

## நெடுந்தீவுக் கடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஐந்து மீனவர்கள் அவர்களது படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி.ஜோன்மகாதேவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர். எதிர்வரும் 16ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## முதல் 100 நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த வாரத்தில் அமைச்சர் டி.எம்.திஸாநாயக்கா கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவநேசன் எம்.பி. கிளைமோர்க் குண்டிலும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி மக்கள் அணியின் சிறிபதி சூரியாராய்ச்சி கார் விபத்திலும்அனுரா பண்டாரநாயக்கா சுகயீனம்காரணமாகவும் மரணமாகினர்.தற்போது அமைச்சர் ஜெயராஜ பெர்னாண்டோ புள்ளே குண்டுவெடிப்பில் பலியாகியிருக்கின்றார். (உ)

## அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கி, ஓட்டத்தை அவர் ஆரம்பித்து வைக்கவிருந்த வேளையில் குண்டு வெடித்திருக்கின்றது.

"இந்த விளையாட்டை நீங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வீர்கள் என நான் நம்புகின்றேன்." - என்று கூறியபடி, தேசியக் கொடியை அசைத்து நிகழ்ச்சியை அவர் ஆரம்பித்தபோது அவரை நோக்கித் தீப்பிழம்புடன் கிளம்பிய குண்டு வெடித்ததை, இந்நிகழ்வை ஒளிப்பதிவு செய்த கமராக்கள் பதிவு செய்துள்ளன.

குண்டு வெடித்த இடத்திலேயே அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உயிரிழந்தார் என்றும் கூறப்பட்டது. அவரது தலை, நெஞ்சு, ஒரு கைப்பகுதி தவிர்ந்த ஏனைய உடற் பகுதிகள் பெரிதும் சிதைவடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கம்பஹா மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஹெக்டர் தர்ம சிறி படுகாயமடைந்துள்ளார்.

காயமுற்றோர் கம்பஹா, ராகம தேசிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பத்துக்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிகின்றது.

கொழும்பு நகரிலிருந்து சுமார் முப்பது கிலோ மீற்றர் தொலைவில் முழுச் சிங்களப் பிரதேசத்தில் இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிக்கின்றது. (அ-உ)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அமைச்சரின் படுகொலை குறித்து விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே ஜனாதிபதி இப்படித் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத சக்திகளின் மிக மோசமான தூண்டுதல் நடவடிக்கைகளின் மத்தியிலும் பொதுமக்களை அமைதியாக இருக்கும்படி வேண்டுகோள் விடுக்கும் அதேவேளை, சகல மக்களுக்கும் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் ஏற்படுத்துவதற்காகப் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதென்ற தமது உறுதிப்பாட்டை இக்கொலை பலவீனப்படுத்தாது என்பதைத் தாம் மீள வலியுறுத்துகின்றார் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் விருப்பமும் இதுவே என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.(உ)

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்படவுள்ளது.

அன்னாரின் இறுதிக் கிரியைகளை பூரண அரச மரியாதைகளுடன் எதிர்வரும் வியாழக்கிழமை நடத்தவும் அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜெயராஜ் மரணத்தை ஒட்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அக்கூட்டத்திலேயே மேற்படி விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

அதன்படி இன்று காலை 10.30 மணிக்கு அவரது பூதவுடல் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டு பிற்பகல் 12.30 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக அங்கு வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அவரது பூதவுடல் கட்டானையில் உள்ள அன்னாரின் இல்லத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வியாழக்கிழமை வரை வைக்கப்பட்டு வியாழக்கிழமை இறுதிக்கிரியை நடைபெறும்.

இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கவென நேற்றைய கூட்டத்தின் போது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த அவரது ஜெயராஜின் பூதவுடல் கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நேற்றுப் பிற்பகல் கொண்டு வரப்படவிருந்தது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## மடு தேவாலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக மடு அன்னையின் திருச்சுரூபம் மடுப் பகுதியை விட்டு வெளியேறியது குறித்தும் வேதனையும், கவலையும் அடைந்திருந்த நிலையில் -

இம்மடலை யாழ்மாவட்ட ஆயர், குரு முதல்வர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பாக எழுதுகின்றோம்.

மன்னார் மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர், குருக்கள், துறவியர், பொதுநிலையினரின் வேதனையிலும், கவலையிலும் நாம் பங்கெடுப்பதோடு போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் உடனடியாக மடுப்பதியின் புனிதத்தை மதிக்கும் வகையில் இப்பிரதேசத்தைவிட்டு அகல வேண்டுகிறோம்.

மிக விரைவில் இப்புனித பிரதேசம் போர்ச் சூழலற்ற பகுதியாக மாறி இறைமக்கள் பாதுகாப்பாகச் சென்று, வழிபடக்கூடிய சூழல் உருவாக வேண்டும் என்று உள்ளது. (அ)

## அமைச்சர் பெர்னா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் கன்னியர்மடம், மரியா ஸ்டெல்லா கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். 1972 இல் விஞ்ஞான, கணித ஆசிரியராக அரச சேவையில் சேர்ந்த அவர் பின்னர் 1974 இல் சட்டக்கல்லூரியில் நுழைந்தார். அச்சமயத்திலேயே தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சட்டக்கல்லூரித் தோழராகவும், கல்விக்காக கொழும்பில் ஒரே அறையில் தங்கியிருக்கும் நண்பராகவும் ஆனார் ஜெயராஜ்.

1977 இல் சட்டத்தரணியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே 1983 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கந்தானைத் தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1989 பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அன்று முதல் அதற்குப் பின்னர் - 1994, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் - நடத்தப்பட்ட அனைத்துத் தேர்தலிகளிலும் கம்பஹா மாவட்ட எம்.பியாகத் தெரிவானார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சரளமாக உரையாடக் கூடிய பெர்னாண்டோபுள்ளே 2006 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளோடு தற்போதைய அரசு ஜெனிவாவில் நடத்திய இரண்டு சுற்று அமைதிப் பேச்சுகளின்போதும் அரசுத் தரப்பில் முக்கிய பிரமுகராகப் பங்குபற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் அதிக உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள மூத்த அமைச்சர்களுள் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் ஒருவர். அத்தகையவர் இவ்வாறு குண்டுத் தாக்குதலுக்கு இலக்காக வாய்ப்பளிக்கப்பட்டமை குறித்து அரசியல் வட்டாரங்களில் பேரதிர்ச்சி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவர் தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்துள்ளார்.(உ)

PHYSICS
A/L 2010
பிரிவு 2
Mechanics
ஆரம்பம்:- 09.04.2008
(Wed, Thur-4.00-5.00 Pm)
A/L 2009
LiGHT
ஆரம்பம்:- 08.04.2008
(Tue, Thur-6.30-7.30 am)
By:K.Selvan
NAVALAR
Jaffna.

CHEMISTRY
Paper Class
(M.C.Q)
Batch-I - Mon to Fri 7.30 - 8.30a.m
Batch-II - 5.30-6.30 p.m
S. Vasu
NAVALAR
JAFFNA.

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2010
கணக்கீடு
P.பகீரதன்
ஆரம்பம்
08.04.2008 Tue 3.p.m
(Tue,Wed 3-4 pm)
குறிப்பு: பாடம் மாறிப் படிப்பவர்களுக்காக அடிப்படையில் இருந்துகற்பிக்கப்படும்
Business College
1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(மத்திய கல்லூரி அருகில்)

SHAMROCK
A/L 2010
புதிய பிரிவு
Tamil - S. சிவா
Poli.SC. - T. சுஜன்
Hindu.Cul. S. கார்த்திக்
LOG - N. சசிகலா
CHRIS - A. மல்லிகா
Geo. - A. RAJAH
ENG. G. RANGIT
Dra - ஆசிரியர்
COMBINED Ma.
சிங்கவம்

36ஆவது வருட சேவையை நோக்கி
BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
O/L- DAY CLASS
எமது வழமையான 'SUPER GRADE' ஆசிரிய குழு
ஆரம்பம் 09.04.2008 புதன் காலை 8.00
★ எமது கல்வி நிறுவனத்தின் தரத்திற்கு கடந்த கால பெறுபேறுகள் சான்றாகும்
★ ஒவ்வொரு ஆண்டும் "10A" பெற்றுக் கொடுக்கின்ற ஒரே ஒரு கல்வி நிறுவனம்
★ கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் நிறுவனம்
(விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்)
A/L 2010 கலை, வர்த்தக, கணித வகுப்புகள் 09.04.2008 இல் ஆரம்பமாகின்றன.

O/L Day Class ஐடியல் அக்கடமி மூன்று இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில்
ஆரம்பம்: 09.04.2008 புதன் 8 a.m.

| பாடம் / இடம் | சண்டிலிப்பாய் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் |
|---|---|---|---|
| கணிதம் | B.குகதாசன் | B.குகதாசன் | B.குகதாசன் |
| விஞ்ஞானம் | N.தேவா | N.பிரியந்தன் | N.தேவா |
| தமிழ் | P.தமிழ்மாறன் | P.தமிழ்மாறன் | P.தமிழ்மாறன் |
| சமூகக்கல்வி | R.S.சந்திரன் | S.விக்கி | S.விக்கி |
| ஆங்கிலம் | B.சசிக்குமார் | B.சசிக்குமார் | B.சசிக்குமார் |
| சமயம் | A.குகதாசன் | S.கவிதரன் | S.கவிதரன் |

குறிப்பு: ★இவ்வாசிரியர்கள் மேற்குறித்த பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட்டும் கற்பிப்பார்கள்.
★ திங்கள் முதல் வெள்ளி வரைகாலை 8 மணி முதல் 1 மணிவரை மட்டுமே வகுப்புகள் நடைபெறும்.
★ கணித பாடம் சித்தியடையாத மாணவர்களுக்கு விஷேட கணித வகுப்பு.
ஆசிரியர் V.N.பத்மநாதன்

தேவை
கணனி ரைப்செற்றிங், மற்றும் பைண்டிங் தெரிந்தவர்கள் (பெண்) உடன் தேவை.
பேப்பர் பதிப்பகம்
இல. 11, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
T.P: 021-4590015

PHYSICS
மின் காந்தத் தூண்டல்
ஆரம்பம்:- 08.04.2008 Tue - 1.00-2.30 p.m
By. K. Selvan
NAVALAR JAFFNA.

பெரதேனியா கல்வி நிலையம்
கேணியடி, கொக்குவில் மேற்கு
PAPER CLASS
வணிகக் கல்வியும் கணக்கீடும்
O/L- 2008
ஆரம்பம்-08.04.2008
செவ்வாய்க்கிழமை 4.00 p.m.
★ கடந்த 10வருட வினாத்தாள் வகுப்பில் செய்யப்படும்.
ஆசிரியர். K. அற்புதராஜா
(B.com Dip in edu)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் நமசிவாயம்



காரைநகர், கோவளத்தை பிறப்பிடமாகவும் வாரிவளவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நமசிவாயம் நேற்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஆறுமுகம்-வள்ளியம்மையின் அன்பு மகனும், நல்லதம்பி-செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார், சிவகலா, சிவகௌரி, சிவமணி, சிவராணி, சிவயோகம், சிவராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா (கந்தையா மில்ஸ், வேம்படி, காரைநகர்), பொன்னம்பலம், சிவசண்முகராஜா (சண்முகம்-மங்கை சில்க்ஸ், சுன்னாகம்), நேசன், கதிர்காமநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2008) திங்கட்கிழமை ந.ப. 12 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாரிவளவு,
காரைநகர்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மிதிவெடி விழிப்புணர்வுக் காலம்: ஏப்ரல் 1 - 14

சிறுவர்கள் கையாளும் சந்தேகத்துக்கிடமான பொருள்களில் கவனமாக இருப்போம்.
அவை வெடிபொருள்களாக இருக்கலாம்.

சர்வோதயம் யுனிசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.